உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௩௯.]	சித்திரபானு ௵ சித்திரை ௴	[பகுதி—௬.
Vol. 39.	**April—May 1942.**	**No. 6.**

உள்ளுறை.

பெரியார்பிரிவு:—பத்திராசிரியர்		௨௬௫—௨௭0
அநுதாபக்கூட்டம் (இராமநாதபுரம்:—		௨௭௧—௨௭௩
இரங்கற்பாக்கள்:—		௨௭௪—௨௯௮
கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	௨௯௯—௩௧௭
மதிப்புரை:—		௩௧௮
இராமசேயம்:— (உத்தரகாதை)	T. K. இராமாநுஜையங்கார், உதவியாசிரியர்	௩௧௯—௩௨0

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

	I. சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு ...	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௯.] சித்திரபானு௵ சித்திரைமீ [பகுதி-௬.
Vol. 39. April—May 1942. No. 6.

பெரியார் பிரிவு

தமிழ்நாடுசெய்த தவப்பயனாகத்தோன்றித் தம் உடல் பொருள் ஆவியெல்லாம் ஒருங்கே தமிழ்ப்பணிக்கே செலவிட்ட மஹாமஹோபாத்யாய—தாக்ஷிணாத்யகலாநிதி—திராவிடவித்யாபூஷணம்—டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நிகழும் சித்திரபானு௵ சித்திரைமீ 16௳ (28-4-42) திருக்கழுக்குன்றத்தில் இவ்வுலகவாழ்வைத்துறந்து பிரிந்தமையறிந்து துயருறுகின்றோம்.

இவர், இத்தரை புகழும் உத்தமதானபுரத்தே இறைவன் பூங்கழல்போற்றும் ஓங்கியகீர்த்தி வேங்கடராமண வேதியர்மகிழ வியனிலமெல்லாம் செந்தமிழ் நாளும் சிறக்கத் தோன்றி, இளமையிலேயே தமிழ்க்கும் தமிழ்ப்புலவர்க்கும் தாயகமாகவிளங்கிய திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்து, அங்கு அப்போது ஆதீனகர்த்தராயிருந்தவரும் உயர்ந்த செந்தமிழ்ப்புலமையும் சிவநெறியொழுக்கும் உடையவரும் புலவரையெல்லாம் புரந்துவரும் பெருந்தகையாயிருந்தவருமான சீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரால் அபிமானிக்கப்பெறும்பேறுபெற்று, அவ்வாதீனத்தில் அப்போது தமிழாசிரியராயிருந்தவரும் தமிழ்க்கவிச்சக்ரவர்த்தியென்று பாராட்டத்தக்கவருமான திரிசிரபுரம் ஸ்ரீ. மீநாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களிடம் முறையே தமிழ்பயின்று சிறந்தவர்; கும்பகோணத்திலும் சென்னையிலும் உள்ள அரசாங்கக்கல்லூரிகளிலும் அண்ணாமலைபல்கலைக்

கழகத்து ஸ்ரீ மீநாக்ஷிகல்லூரியிலும் தமிழ்ப்பேராசிரியராயிருந்து பல்லாயிரமாணவர்க்குத் தமிழறிவூட்டியவர்; பெயரளவாற் கேட்கப் படுவனவாய்க் கற்பாரும் கேட்பாருமின்றிச் சிதலுக்கிரையாய் அழியவிருந்த பழைய சங்கத்தமிழ்நூல்பலவற்றை ஆராய்ந்து வழுநீக்கி, யாவரும் எளிதிற் படித்துப் பயனடையும்படி முக வுரை ஆராய்ச்சியுரை குறிப்புரை விளக்கவுரை முதலியவற்றோடு வெளியிட்டுதவிய பெருவண்மையுடையவர்; உயர்குடிப்பிறப்பும் நல்லாசிரியர்க்கமையவேண்டிய அருங்குணங்கள் பலவும் கவித்வ மும் குருபக்தியும் ஞாபகசக்தியும் உருவநலனும் தோற்றப் பொலிவும் உடையவர்; பிறப்பால் தொடர்புடைய தம் இனத்தா ரையும் கற்பிக்கும் தொழிலால் தம்மொடு தொடர்புடைய இனத்தினரான தமிழ்ப்புலவரையும் பிறமொழிப்புலவர்பெருமக்க ளேயும் தழுவி அளவளாவி இன்புற்று வாழ்ந்தவர்; ஜைநம் பௌத்தம் முதலிய புறச்சமயநூற்கொள்கைகளேயும் நுணுக்கங் களேயும் முடிவுகளேயும் நன்கறிந்தவர்; தாம் அறிந்தவற்றைப் பிறர் நன்கு தெளிந்துகொள்ளுமாறு இனிதே பேசவும் எழுதவும் வல்ல வர்; உரையும் பாட்டுமாகிய புதியநூல்கள் பலவற்றை உலகம் வியந்து மகிழ்ந்து பாராட்டுமாறு இயற்றும் ஆற்றலும் வாய்ந்தவர்; உலககுருவார்களாய்,சிருங்கேரி ஸ்ரீசாரதாபீடத்தையும் ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடத்தையும் அலங்கரிப்பவர்களாயுள்ள சங்கராசாரிய ஸ்வாமிகளாலும், திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் சூரியனார்கோயில் கோயிலூர் திருப்பாதிரிப்புலியூர் வானமாமலே முதலிய ஆதீனகர்த்தர்களாலும் நன்குமதிக்கப்பெற்றவர்; மாட்சி மிக்க ஏழாவது எட்வர்டு மன்னர்பெருமானல் மஹாமஹோபாத்யாயப் பட்டமும் ஐந்தாவதுஜார்ஜு சக்கரவர்த்தியவர்கள்காலத்தில் இளவரசராயிருந்த மாண்புமிக்க எட்டாவது எட்வர்டு அரசர் பெருந்தகையால் சென்னேயில் 'கில்லத்' சம்மானமும் வழங்கப் பெற்றவர்; தமிழ்நாட்டுப் பிற்காலப் பாரியாய்விளங்கிய ஸ்ரீபாஸ்கர ஸேதுபதியவர்களும்,அவர்கள் திருக்குமாரரும்இம்மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனராயிருந்தவருமாகிய ஸ்ரீராஜராஜேசுவர முத்துராமலிங்கஸேதுபதியவர்களும், இவர்கள் திருக்குமாரரும் இப்போது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராயிருப்பவருமான

மேன்மைமிக்க ஷண்முகராஜேசுவர் நாகநாதஸேதுபதியவர்களும் ஆகிய மூன்று தலைமுறைத் தமிழரசர் பெருமக்களாலும் இம்மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் தமிழ்வள்ளலுமான பொன். பாண்டித் துரைத்தேவரவர்களாலும் பல்கலைக்குரிசிலும் பெருவள்ளலுமான செட்டிநாட்டரசர் திருத்தகு ராஜா ஸர். அண்ணாமலைசெட்டியாரவர் களாலும் பெருமதிப்போடு நன்கு ஆதரிக்கப்பெற்றவர்; மஹா வித்வான் தியாகராயசெட்டியாரவர்கள், சென்னை உயர்தரநீதி மன்றத்துப் பிரதான நீதிபதியாயிருந்து பெரும்புகழ்பெற்ற டாக்டர் மணிஐயரவர்கள், சென்னையிற் சிறந்த வழக்கறிஞராயிருந்தவரும் உயர்ந்த தமிழ்ப்பற்றுடையவருமான ஸ்ரீ. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் முதலிய தக்கார் பலருடன் நெருங்கியதொடர்புடைய ராயிருந்தவர்; வடநாட்டுமஹாகவியாகிய தாகூராலும் கௌரவிக் கப்பெற்றவர்; தம்மிடம் தமிழ்பயிலவந்த மாணவர்பலரை உண்டியும் உடையும் உறையுளும் உதவி ஆதரித்துத் தமிழ் பயிற்றுவித்து அவர்க்கெல்லாம் தம் செல்வாக்கால் அவரவர் தகுதிக்கேற்ற உத்தியோகமும் கிட்டும்படிசெய்து வாழ்வித்தவர்; தமக்குப் பிறர் செய்த சிறுநன்றியையும் மறவாது நினைந்து நினைந்து சமயம்வாய்த்தபோதெல்லாம் தக்கவாறு பாராட்டி மகிழ்பவர்; தமி ழில் யாவரும் படித்துணருமாறு இனியவசனநூல் இல்லையென்னும் குறைதீரப் பல புதிய வசனநூல்களை எழுதியுதவித் தமிழை வள முறச்செய்துவந்தவர்.

இவருடைய நூற்பதிப்புமுறை ஆங்கிலப்போறிஞரும் நயந்து மேற்கொள்ளுமாறும் கற்பார் இனிது மகிழ்ந்து கற்குமாறும் அமைந்தது. நூல்களைப் பரிசோதித்துவருங்கால் ஆங்காங்குத் தம் கருத்திற்கிசைந்தவாறு பாடங்கொள்ளாது ஓலையேட்டிலுள்ள பாடங்களையேகொண்டு அதற்கேற்ற பொருள்கண்டு பழையசெய்யு ளுருவும் உரையுருவும் சிதையாது பாதுகாப்பது இவர்கள் சிறப் பியல்பாகும். தாம் பதிக்கும்நூல்களில் விளங்காத பகுதிகளை இயன்றவரை அவை வல்ல பிறர் பலரிடம் விளங்கக்கேட்டு வரைந்து வெளியிடுமியல்பும் இவர்க்கு உண்டென்பது மணிமேகலை முதலிய நூற்பதிப்புக்களால் அறியத்தகும். இவருடைய தமிழ்ப்புலமையும்

நூற்பதிப்புமுறையும் ஆங்கிலப்போறிவோடு தமிழறிவும் உடையராய் விளங்கிய ஸ்ரீ. ரங்கநாதமுதலியாரவர்கள் புரொபஸர் சுந்தரம் பிள்ளையவர்கள், டாக்டர் போப்பையரவர்கள், ஜூலியன் வின்ஸன் முதலியவர்களால் நன்குமதிக்கப்பட்டவை.

இயற்பெயர்கொண்டு சுட்டவேண்டாது ஐயரவர்கள் என்ற அளவில் தம்மை யாவரும் அறிந்துகொள்ளும்படி பிரசித்தராய் விளங்கிய இவர்கள், தம் ஒழுகலாற்றால் உலகிற்கு ஒருவழிகாட்டியாய் விளங்கியதன்றித் தாம் அத்தகைய உயர்நிலையெய்துதற்குக் காரணபூதர்களான தம் ஆசிரியர் ஸ்ரீமீநாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்பாலும் திருவாவடுதுறையாதீனகர்த்தர்பாலும் என்றும் குறையாத பேரன்புடையராயும் நன்றியறிவுடையராயும் விள்ங்கினவர்கள். இது, ஐயரவர்கள், பிள்ளையவர்கள் சரிதத்தைத் தமிழ்மக்கள் நன்குணரும்படி ஒரு பெரு வசனநூலாக விரித்தெழுதி வழங்கியதுகொண்டும், தம் நிரியாணகாலத்தே திருக்கழுக்குன்றத்துத் திருவாவடுதுறைமடத்தில்வசித்து இறைவனடிநிழலெய்தியது கொண்டும் அறியத்தகும்.

ஐயரவர்கள், இம்மதுரைத்தமிழ்ச்சங்கந்தோன்றியநாள்முதல் அதன் நிருவாகஸபையுறுப்பினராகவும், மதுரைத்தமிழ்ச்சங்கத்திலும் சென்னைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை பல்கலைக்கழகம் முதலியவற்றிலும் பரீக்ஷாபாட நிர்ணயஸபையின் தலைவராகவும் பரீக்ஷாஸபையின் தலைவராகவும் பரீக்ஷகராகவும் இருந்தும் செய்த தமிழ்ப்பணிகள் பல. இவர்கள் தமிழுக்குச் செய்துவரும் பெருநன்றிகருதி மதுரைத்தமிழ்ச்சங்கத்தார், 1925-ஆம் ஆண்டு நிகழ்ந்த அச்சங்கத்தின் இருபத்துநான்காம் வருடக்கொண்டாட்ட மஹாஸபையில், அப்போது அச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியாயிருந்தவரும் இப்போது உபாக்ராசனராயிருப்பவருமான திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பலதமிழ்ச்செல்வருதவி பெற்றுத்தொகுத்த ரூபா. ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியொன்றை ஐயரவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தாரும் ஐயரவர்கள் தகுதியறிந்து அவர்களுக்கு டாக்டர்ப்பட்டம் வழங்கிச் சிறப்பித்தும், அவர்கள்பதித்த குறுந்தொகைவெளியீடு முதலியவற்றுக்கு ஓரளவு பொருளுதவிபுரிந்து ஆதரித்தும் போந்தனர்.

ஐயரவர்கள் நூல்களை வழங்கியும் நூலுரைபோதகாசிரியரா யிருந்தும் தமிழ்ப்பயிற்சி வளர்தற் குதவியதுமட்டுமின்றித் தமிழ் பயில்வார்க்கு ஊக்கமுண்டாகுமாறு, தமிழ்ப்பயிர்வளர்க்குங் கொண்டலாய்த்திகழும் திருப்பனந்தாளாதீனகர்த்தர்களால், சென்னைப் பல்கலைக்கழகத்தார் நடத்தும் தனித்தமிழ்வித்வான் பரீக்ஷையில் ஆண்டுதோறும் முதற்றரத்தினராய்த்தேறும் ஒருவர்க்கு ரூபா ஆயிரம் 'ஐந்தாம்ஜார்ஜு சக்கரவர்த்தியவர்கள்ஞாபகார்த்தத் தமிழ்ப்பரிசு' என்றபெயரால் என்றென்றும் அளித்துவரும்படி நிதி யுதவுவித்தும், பல ஆண்டுகளாக அப்பரிசுபெற்றவர்க்கு வெவ்வேறுதலங்களில் தாமே முன்னின்று தக்கவர்களைக் கொண்டு பரிசுவழங்குங்கொண்டாட்டத்தை நன்கு நடத்துவித்தும் போந்தவர்கள். இன்னும் இவர்கள் பெருமையெல்லாம் அடுத்துச்சேர்த்துள்ள இரங்கற்பாக்கள் முதலியவற்றுல் நன்குவிளங்கும்.

இத்தகைப்பெருமைவாய்ந்த ஐயரவர்களைப் பிரிந்து இன்று தமிழ்நாடு வருந்துகின்றது. சென்னையில் அணிமையில்நேர்ந்த போர்க்குழப்பத்தால்விளைந்த தீங்குகளுள் ஐயரவர்கள் பிரிவும் ஒன்ருகும். எதிர்பாராதநிலையில்நேர்ந்த அவர்கள் பிரிவால் துயருறும் அவர்கள் குடும்பத்தார்க்கும், அவர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாயிருந்தும் அவர்கள் சென்னையைவிட்டுத் திருக்கழுக்குன்றத்தில் வந்து தங்கநேர்ந்தமையால் அவர்கள் நிரியாணகாலத்தில் உடனிருந்து வேண்டிய பணியாற்ற இயலாது போனமைக்கு மனம்றுகிநிற்கும் உறவினரும் நண்பரும் செல்வரும் புலவரும் மாணவரும் ஆகிய யாவருக்கும் நமது மனப்பூர்வமான ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

ஐயரவர்கள், தம் வாழ்நாள்முழுதும் தமிழ்நாடெங்கும்சென்று சென்று தேடித்தேடித் தொகுத்த தம் அரும்பெருநூற்கருவூலத்திலிருந்து இதுவரை நூற்றுக்கணக்கான அரும்பெறற்றமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுதவியதன்றி, மேலும் வெளியிடுவதற்காக ஆராய்ந்து செப்பஞ்செய்துவைத்தநூல்கள் பல. ஆராய்ந்துவெளியிட எண்ணியிருந்த நூல்களும் பல. இன்னும்

பல்லாண்டு இவர்கள் வாழ்ந்திருந்து அவற்றையெல்லாம் வெளியிட்டுத் தமிழ்ப்பணி செய்ய இயலாதவாறு இவர்களைப் பிரியநேர்ந்தது தமிழ்மக்கள் தவக்குறைவாகும். அக்குறைதீர ஐயரவர்கள் மாணுக்கரும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களு மான புலவர்பெருமக்களால் ஐயரவர்கள் செய்யக்கருதியிருந்த தமிழ்ப்பணியையெல்லாம் முற்றச் செய்விப்பது தமிழ்மக்கள் கடமையாகும்.

மேலும், ஐயரவர்கள் தம் வாழ்நாள்முழுதும் நூல்களைத் துருவித்துருவித் தொகுத்த ஆராய்ச்சிக்குறிப்புக்கள் பலவும் தமிழ் பயில்வார்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பெரும்பயன் விளைக்கத் தக்கனவாகும். அவற்றையெல்லாம் ஐயரவர்கள் திருக்குமாரர் ஸ்ரீ. S. கல்யாணசுந்தரமையரவர்கள் தக்க புலவருதவிபெற்று ஏற்றபெற்றி விரித்து வெளியிட்டும், ஐயரவர்கள் ஆநந்தவிகடனில் வெளியிட்டுவந்த சுயசரிதையையும் கலைமகளில் வெளியிட்டுவந்த மஹாவித்வான் தியாகராயசெட்டியாரவர்கள் சரிதத்தையும் முற்று வித்தும், 'நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க் கன்றும் உதவும் கனி' என்பதனோடு இயையுமாறு தமிழ்மக்களுக்குநல்விருந் தளிப்பார்களென்றும் நம்புகிறோம்.

தமிழ்க்கற்பகமாயிருந்த ஐயரவர்கள் பூதவுடம்பு நம்மை விட்டுப் பிரிந்து மறைந்தாலும், அவர்கள் புகழுடம்பும், அவர்கள் நல்கிய (கற்பகத்தின் உறுப்புக்களாகிய தளிரும் அரும்பும் மலரும் துணரும் கனியுமாகிய) தமிழ்நூல்களும் என்றென்றும் நம்மை விட்டகலாது நலம்பயந்துகொண்டேயிருக்கும்.

ஐயரவர்களான்மா இறைவனிணையடிநிழலிற் சாந்தியடைக. தமிழ் நெடிது தழைக.

பத்திராசிரியர்.

உ

மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் தேகவியோக அநுதாபக்கூட்டம் (இராமநாதபுரம்).

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், இவ்வுலகவாழ்வைத் துறந்த ஆற்றொணாத்துயரத்தைக்குறித்து இராமநாதபுரவாசிகளின் அநுதாபக்கூட்டமொன்று, மாட்சிமைதங்கிய ஸ்ரீமத். ஷண்முக ராஜேசுவரஸேதுபதியவர்கள் தலைமையில், ராஜாஸ் ஹைஸ்கூல் மன்றத்தில் 3—5—1942 மாலை ஐந்துமணிக்கு நடந்தேறியது. நகரத்திலுள்ள முக்கியமானவர்கள் பலரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தலைவரான தமிழ்வேந்தரவர்கள், கொடைமிகுந்தவர்களெவரோ அவரே சக்கரவர்த்தித்தன்மையுடையவரென்றும், அழியாத தமிழ்ச்செல்வங்களை வாரி வழங்கிய ஐயரவர்களைத் தமிழ்ச் சக்கரவர்த்தி என்று நாம் கொண்டாடத்தகுமென்றும், ஐயரவர்களே தமிழுக்குப் புத்துயிரளித்தவர்களென்றும், அவர்கள் நன்முயற்சியாற்றான் பல தொன்னூல்கள் வெளிவந்தன என்றும், இத்தகைய தமிழ்க்கலைவள்ளலை இழந்தது தமிழ்நாட்டின் தவக்குறைவே என்றும் மொழிந்து, மேலும் சொல்ல இயலாமற் கண்ணீர்விட்டழுது தழுதழுத்த சொற்களால் நகரவாசிகளின் அநுதாபத்தைப் பிரேரிக்கும்படி மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

ஸேதுபதிகள் கண்ணீர்வாரத் தழுதழுத்து மொழிந்த காட்சி சபையோரின் உள்ளத்தை மிகவும் உருக்கியது. ஐயரவர்களிடம் ஸேதுவேந்தர்க்குள்ள ஆர்வமிகுதியை அவர்கள் புன்கண்ணீர் பூசலிட்டுக் காட்டியதென்று அனைவரும் உணர்ந்தனர். பின்னர்,

“‘அரிய பெரிய தமிழ்த்தொண்டைத் தம் வாழ்நாள்முழுதும் நன்காற்றித் தமிழ்த்தொன்னூல்களை இந்நாட்டிற்குதவிப் பெரும் புகழ்பெற்ற செந்தமிழ்ப்பேராசிரியர், மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, திராவிடவித்யாபூஷணம், டாக்டர், உ. வே, சாமிநாதையரவர்கள் இவ்வுலகவாழ்வைத்துறந்ததுபற்றி இராமநாதபுர

வாசிகளாகிய நாம் ஆற்றொணுத்துயரடைகின்றோம்' என்பதை ஐயரவர்களின் அருமைக்குமாரர் ஸ்ரீ. S. கல்யாணசுந்தரமையரவர் கட்கு மாட்சிமைதங்கிய தலைவரவர்கள் தெரிவிக்குமாறு வேண்டு கிறோம்''

என்னும் அநுதாபப்பிரேரணையை மகாவித்துவானவர்கள், துக்கத் தால் அடைத்த குரலுடன், பிரேரித்தபோது சபையோர் யாவரும் மௌனமாய் எழுந்துநின்று மரியாதைசெய்தனர். பின்பு ஐயங்கா ரவர்கள், இளகிய மனதுடன் கண்ணுங் கம்பலையுமாக, ஐயரவர்க ளின் அருமைபெருமைகளையும், பண்டைநூல்களைக் கண்டு வெளியிடுவதற்கு அவர்கள் பட்ட அரும்பாடுகளையும், அவர்கள் பதிப்பித்த நூல்களின் தனிச்சிறப்புக்களையும், அந்நூல்களால் தமிழ்நாடடைந்த பெரும்பயன்களையும் அவர்கட்கும் தமக்கும் அமைந்த நெடுங்காலத்தொடர்பையும், தமிழ்ச்சூரியனுகிய அவர் கள், இனித் திரும்பிவாராதபடி மறைந்ததினுல் தமிழுலகம் அடைந் துள்ள நஷ்டத்தையும், வடநாட்டுக்கு மகாகவி தாகூர் பெருமை யைக் கொடுத்ததுபோலத் தென்னுட்டிற்குத் தனிப்பெருஞ்சிறப் பை அளித்தவர்கள் ஐயரவர்களே என்பதையும், ஜூலியன்வில் ஸன், டாக்டர் போப் முதலிய அயல்நாட்டு அறிஞர்களாலும், தாகூர் முதலிய நம்நாட்டு மகாகவிகளாலும் புகழ்ந்துரைக்கப் பெற்ற மேன்மையாளர் ஐயரவர்களென்பதையும், கேட்டோர் உள்ளங்கரைய ஒருமணிநேரம் விரித்துரைத்ததோடு, ஐயரவர்கள் மேல் தாம் இயற்றிய இரங்கற்பாக்களையும் தம் புத்திரர் ஸ்ரீ. ரா. இராமாநுஜ ஐயங்காரவர்களைக்கொண்டு படிக்கச்செய்து பொருள் விளக்கினர்கள்.

அப்பிரேரணையை, ராவ்சாகிப் வித்வான் மு. இராகவையங்கா ரவர்கள் ஆமோதித்துச் சென்னை லெக்ஸிகன் ஆபீசில் தாம் 29 ஆண்டுகள் தமிழ்ப்பணிபுரிந்ததற்குக் காரணமாயிருந்தவர்கள் ஐய ரவர்களேயென்றும், செய்யாமற்செய்த அவர்கள் பேருதவியைத் தாம் என்றும் மறக்கமுடியாதென்றும், சங்கப்புலவர்கள் ஒன்று சேர்ந்த வடிவமே ஐயரவர்கள் திருவுருவம் என்றும், அவர்கள் விளங்கிய காலத்தைச் சங்ககாலமாகவே சொல்லத்தகுமென்றும்,

அவர்கள் கோயில் அமைத்துக் கும்பிட்டுப் பூசிக்கத்தக்கவர்களென்றும், அவர்கள்பிரிவு தமிழுலகத்தைத் துன்பக்கடலுள் ஆழ்த்திவிட்டதென்றும், தாம் இயற்றிய இரங்கற்பாடல்களைக்கொண்டு பொருள்கூறி யாவரையும் மனமுருகச்செய்தனர்.

இதற்குப்பின் அப்பிரேரணையை ஆதரித்துச் சென்னை அட்வகேட் ஸ்ரீ. கேசவையங்காரவர்கள் தமிழுருவாகவே ஐயரவர்கள் விளங்கினார்களென்றும், கல்வியாளரை எந்நிலையிலும் போற்றுவதே கலைவாணியின் வழிபாடாகுமென்றும், அவர்கள் தமிழ்நாட்டின் தீபமாகவே பிரகாசித்தவர்களென்றும், அத்தீபத்தை நன்கொளிரும்படி செய்தவர்களில் தமிழ்வேந்தராகிய ஸேதுபதிகளே சிறந்தவர்களென்றும் மிக உருக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பிறகு, மகாவித்வானவர்கள்புதல்வரும் ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழாசிரியருமான வித்வான். ரா. இராமாநுஜ ஐயங்காரவர்கள், ஐயரவர்கள் தமிழ்மொழிக்காற்றிய பெரிய பணிகளையும் அவர்களுடைய நல்லிசைப்புலமையினையும்பற்றிய பாடல்களைப் பொருள் கூறி விளக்கினார்கள்.

பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் சிவஞானம்பிள்ளையவர்கள், தம்மிடத்து ஐயரவர்கள் காட்டிய பேரன்பை அவர்கள் திருக்கரத்தால் வரைந்த நிருபங்கள்மூலம் எடுத்துரைத்து, 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் பொய்யாமொழிக்கு இலக்கானவர்கள் ஐயரவர்களேயென்பதை விளக்கினார்.

அப்பால் இராமநாதபுரம் நகர காங்கிரஸ்கமிட்டியார் நிறைவேற்றிய தனியான ஓர் அநுதாபத்தீர்மானமும், ஸ்ரீ. எம். ராஜா ஐயரவர்களால் சபையோர்முன் படிக்கப்பட்டது.

இறுதியில் ஐயரவர்களது பெரும்பிரிவால் உளங்கனிந்த உருக்கத்துடன் யாவரும் கலைந்தனர்.

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி

திராவிடவித்யாபூஷணம் டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

உலகவாழ்வைத்துறந்த ஆற்றொணாத்துயர்குறித்துப் புலவர்கள் இயற்றிய

இரங்கற்பாக்கள்.

ஸேதுஸமஸ்தான மகாவித்வான் பாஷாகவிசேகரர்

ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் பாடியவை.

நாரார் பொருள்க ணனிவிளக்கு நல்ல ஞாயி றதுமறைந்து
வாரா தொழியின் வையமெலாம் வருந்தா திருக்கும் வழக்குண்டோ
காரார் கொடையிற் கண்ணனைய கனமாப் பெருநூற் கதிர்பரப்பிச்
சீரார் ஒளிசெய் திருள்சீத்துச் சென்றாய் சாமி நாதவள்ளால். (1)

பாட்டிற் களித்தா யிசையமுதைப் பருகிக் களித்தாய் பைந்தமிழைக்
காட்டிக் களித்தாய் நல்லுரையைக் கருதிக் களித்தாய் கலைபலவும்
ஊட்டிக் களித்தா யிவைதகுமா லொருவிச் சாமி நாதமுகில்
வீட்டிற் களித்தா யெமைத்துயரில் வீழ்த்திக் களித்தன் முறையேயோ. (2)

அமிழ்த மெனப்பல் லறவுரைக ளருந்தி யருந்தி மகிழ்ந்திலமால்
இமிழ்தண் கடற்பா ரிடைப்பழமை யினையெஞ் செவியின் மடுத்திலமால்
கமழ்தண் பொழில்போற் கலைமலர்ந்து கனிந்த வடிவங் கண்டிலமால்
தமிழென் செயும்யா மென்செய்வமோ சாமி நாத தயாகரனே. (3)

மைந்தா வருக வருகவென வாணி வாரி யெடுத்தனளோ
எந்தாய் வருக வருகவென வெழில்வான் புலவ ரெதிர்ந்தனரோ
முந்தார் கபிலர் பரணர்முதன் முன்னோ ரெதிர்கொண் டுவந்தனரோ
நந்தா மகிழ்வான் புகுநாளி னங்கள் சாமி நாதனையே. (4)

பாடு நினையாய் பசிநினையாய் பயிலுந் துயிலு நினையாயாற்
கூடு நினையாய் நீடுபொருள் குறைத னினையாய் குறித்ததமிழ்
ஏடு நினைவா யதுவெளியிட் டிலக நினைவா யிவைவிடுத்து
வீடு நினைவா யாயினையென் விளம்பு சாமி நாதவள்ளால். (5)

யாரோ பதிப்பா ரினிப்பெருநூ லெவரோ வுரைப்பா ருரைகளெலாம்
பாரோர் பருகத் தமிழ்ச்சுவையைப் பரிந்திங் களிப்பா ரெவரோபேய்த்
தேரோ வெனச்சொ லிப்புவியிற் சிதையாப் புலமைப் பயிர்க்கினிய
காரோ வெனவந் தவதரித்த கண்ணே சாமி நாதவள்ளால். (6)

அரிய தமிழை வளர்க்கவென வலைந்த வூர்க ளெத்தனையோ
உரிய பொருளை விளக்கவென வுழந்த பாடு மெத்தனையோ
தெரிய வெழுதி யெழுதிமுறை தெரித்த பெருநூ லெத்தனையோ
பெரிய சாமி நாதமுகில் பிரிவி னழுவா ரெத்தனையோ. (7)

திருந்து தமிழை வளர்த்துமகிழ் சேது பதிகட் கினியாய்நின்
பொருந்து தலைமை பொறுத்தவவை புல்லென் றொழியப் புதுப்புதிய
மருந்து பொருவுந் திருமொழிகண் மாந்துஞ் செவிகள் வறுமையுற
விருந்து சுரருக் காயினையென் விள்ளாய் சாமி நாதவள்ளால். (8)

மண்ணிற் றமிழ்த்தாய் வனைந்தசிந்தா மணியு மணிமே கலையுமுயர்
கண்ணிற் சிறந்த காஞ்சிமுதற் கலனுஞ் சிலம்பின் செயலுநினால்
எண்ணிற் புறத்தி னெழிலுமகத் தெழிலுந் தெளிந்து களித்தேம்நீ
விண்ணிற் புகலா விடர்க்கடலில் வீழ்த்தேஞ் சாமி நாதவள்ளால். (9)

திருவா வடுதண் டுறைமடத்தார் செய்த நன்றி தினநினைந்துள்
ளுருகா நிற்பை யவர்நிலமே யுறுதி யெனச்சென் றுவந்ததமிழ்க்
குருமீ னாட்சி சுந்தரனைக் குலவிக் களிக்க விண்ணிலொளி
யுருவாய்ப் புகுந்தா யோவறியோ முயர்ந்த சாமி நாதவள்ளால். (10)

வேறு

கற்றார்க்கு நெறிகாட்டிக் கல்லார்க்கு மதியூட்டிக் கசிந்து நின்னைப்
பெற்றார்க்குப் புகழ்சூட்டிப் பெரியோர்க்கு நிலைகாட்டிப் பெருந்தக் கோவைச்
செற்றார்க்கு நயநீட்டித் திருந்தார்க்கு முறைபூட்டிச் சிறந்த நீயோ
உற்றார்க்குத் துயர்கூட்டி யுயர்சாமி நாதவிவ ணொளித்த தென்னே. (11)

வேறு

ஞானத் தாலுயர் நன்சாமி நாதனே
வானிற் சேரினும் வண்டமி ழில்லையேல்
தானித் தார்ணி சார்வரு கிற்பவன்
மேனற் பாலின்ப வீடெய்தி மீண்டிலான். (12)

சாமி நாத தயாகரன் முன்சென்றன்
நாமெ னுருவம் ஞாலத் தெனச் சொலித்
தோமி லாத திலகந் தொலைத்தனள்
தேமி னூரிற் றிகழ்கலை வாணியே. (13)

வேந்தர் மேன்மையும் வீறுத மிழ்க்குடி
மாந்தர் மேன்மையும் வள்ளல்கண் மேன்மையுங்
காந்தை மேன்மையுங் கற்றவர் மேன்மையும்
போந்த மேன்மை புகழ்ச்சாமி நாதனல். (14)

சங்க நூற்புல வோர்செய் தவத்தினல்
இங்கு வந்த வெழிற்சாமி நாதனே
தங்கி வாழ்ந்த தகைமைப் பெருநெறி
நங்கள் வாழ்விற்கு நல்லுப காரமே. (15)

ராவ்ஸாஹிப், வித்வான்.

ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்

இயற்றியவை.

பாவாழ்ந்த சங்கத்தார் பலருருவும் ஓருருவாய்
நீவாழ்ந்தாய் உன்காலம் நெடுஞ்சங்க காலமெனப்
பூவாழ்ந்து தமிழகத்தைப் புதுக்கியநீ பொன்னுலகம்
சாவாழ்ந்து சென்றதென்னே சாமிநா தேந்திரனே. (1)

பூரணமாய் நலம்பலவும் புகும்சாமி நாதவள்ளால்
நேரணவு மாயுளினும் நிறைவுறுவா யென்றிருந்தேம்
பேரணவு நூற்றாண்டுப் பெருவிழவுங் காணாதே
மாரணமிங் குற்றாயோர் மாமாங்கம் பொறுத்திலையே. (2)

அரசினரா லகிலகலை யவையினரா லரும்பொருள்கள்
உரைசெய்குரு வாலுலகி லுயர்பட்டம் பெற்றனையால்
தரைசெய்தவப் பேறனைய சாமிநா தையவுன்றன்
விரைசெலவு விண்புலவர் மிகுசிறப்பும் வேண்டியதோ. (3)

'மீண்டிளமை யுற்றேனென் வேலையினி மேன்மேலும்
ஈண்டுநிறை வேறும்' என்றே எண்பதா நிறைவான
ஆண்டுவிழ வினிற்சொற்ற யருஞ்சாமி நாதவண்ணல்
மாண்டனவோ அவ்வுரையு மாளாத வாய்மையினாய். (4)

புல்லேறிப் போனதமிழ்ப் புலந்திருத்திப் புந்தியெனும்
நல்லேரின் வளம்படுத்த நயச்சாமி நாதனெனும்
சொல்லேரி னுழவனின்றேல் தொல்சங்கச் செய்யுளெலாம்
செல்லேறிப் போகாதோ செந்தமிழின் பயிர்சிதைந்தே. (5)

பண்டுமுது மைக்கிரங்கிப் பாடியவர் போலொருகைக்
கொண்டதொரு கோலுண்டோ குனியுடலுண் டோவூன்றும்
தண்டெனநூல் கொண்டுநிமிர் சாமிநாதன் தமிழ்க்குத்
தொண்டுவந்து செய்தவகை சொல்லுந் தரத்ததுவோ. (6)

சேயோடு தான்பெற்ற செல்வம்போ மென்பர்தமிழ்த்
தாயோதன் வளம்புதுக்குஞ் சாமிநா தப்பெயர்கொள்
தூயோனுந் திருமகனைத் தோற்றனளங் தோவவளே
ஆயோவென் றுதரிக்கும் அருந்தனயர் இனியாரே. (7)

இம்பரிடை நல்லறிஞ ரிருந்தளவு மின்பத்திற்
கும்பர்நுக ரின்பமுமொப் பாகாதென் றோதுதமிழ
நம்பவுரை செய்சாமி நாதனின்று சென்றதுதான்
அம்பரவின் பத்தளவும் ஆராயும் நோக்கேயோ. (8)

களிப்படுத்த சொல்வழங்கு கனிவாயு மினிமையினை
வெளிப்படுத்த திருமுகமும் விரைந்துதவுந் திருக்கரமும்
தளிப்படுத்துப் பூசிக்கத் தகுஞ்சாமி நாதவுனைப்
பளிப்படுத்த பின்காணும் பாக்கியத்தை யிழந்தேமால். (9)

குலவுபல ரன்பருடன் கூடியுவப் பித்திடுநீ
உலகிலவ ரெந்நாளு முள்ளப்பி ரிந்தனையால்
புலவர்தொழி லாமிதுதான் புகழ்ச்சாமி நாதவுனை
விலகுமதோ நின்பிரிவு வினைத்துயர் மிகக்கொடிதே. (10)

மெய்வினய மார்புலவர் மேம்படுத்த சீர்த்தியினுய்
பொய்வினையுங் கொடுமையுமாம் புத்துலக மிதைவெறுத்துச்
செய்வினைமுற் றினையாகித் தேவவிமா னத்தூர்ந்தாய்
உய்வினையென் றுன்சரித முலகென்று மோதுமரோ. (11)

தொண்டிழைத்துப் பாடிநனி துதித்தவடி யார்தம்மைப்
பண்டழைத்துக் கொண்டருளுங் கயிலைப் பரம்பரன்றான்
மண்டழைத்த நற்கீர்த்தி மான்சாமி நாதனையும்
தண்டழைத்த தாணிழற்கீழ்ச் சாந்திபெற வைத்தனனே. (12)

இராமநாதபுரம் ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான்

ரா. இராமாநுஜஐயங்கார் பாடியவை.

இருந்தமிழி னின்சுவையை யெந்நாளுந் துய்ப்பதன்றி
விருந்தமிழ்த மமரர்தரின் வேண்டேனென் றுரைத்துநிதம்
பொருந்தியநூ லளித்துயர்ந்த புகழ்ச்சாமி நாதவள்ளால்
திருந்தியவான் புகவெண்ணிச் சென்றதென்னோ செப்பாயே. (1)

உன்குரவன் மீனாட்சி சுந்தரமா லுரைகேட்கும்
அன்புமிகுந் தோதியாக ராஜனெனு மறிவாளன்
முன்புதரு நட்படைய முன்னியோ தமிழரழ
நன்புவிநீத் தகன்றனைசொ னலச்சாமி நாதவள்ளால். (2)

நிலவரையிற் பெரும்புகழை நீள்தமிழிற் பெற்றுயரும்
புலவரையப் புத்தேளிர் பொன்னுலகம் போற்றுமென
நலம்வரையு முளத்தெண்ணி நறுந்தமிழ்நீத் தகன்றனையோ
சலம்வரையா தொளிர்கீர்த்திச் சாமிநா தப்பெரியோய். (3)

மதியினுக்கு நற்புலமே வண்டமிழுக் காருயிரே
கதியினுக்கு மிகுசுடரே கலையினுக்குப் புகுமனையே
துதியினுக்குப் பெருநிலையே சுவடியினுக் குறுதுணையே
விதியினுக்கு ளாயினையால் விழைசாமி நாதவள்ளால். (4)

நீயிவண்வாழ் நாளெல்லாம் நிலைத்ததமி ழன்னையினுக்
கேயபல நூலணிக ளீந்தொளிரச் செய்தனையத்
தாயலறச் சேய்நீதான் றணப்பதுவு முறையேயோ
தேயமெலாம் புகழ்போர்த்த சீர்ச்சாமி நாதவள்ளால். (5)

தண்டமிழ்த்தா யலக்கணுறத் தமிழர்குழாம் படர்கூர
எண்டிசையோ ரல்லலுற விருஞால மொளியிழப்ப
அண்டரெலாஞ் சீர்செய்ய வவ்வானிற் சேர்ந்ததென்னோ
பண்டுளநூல் தருசாமி நாதனெனும் பண்ணவனே. (6)

கண்கொடுத்தாய் தமிழருக்கே கலைகொடுத்தாய் புலவருக்கே
எண்கொடுத்தா யாய்வோர்க்கே யிசைகொடுத்தாய் நாட்டினுக்கே
பண்கொடுத்தாய் பனுவலுக்கியாம் பரிதவிக்கும் படர்கொடுத்து
விண்கொடுத்தா ரெனச்செலலென் வெல்சாமி நாதவள்ளால். (7)

ஸ்ரீ வானமாமலைமடம் ஆஸ்தானவித்வான்

அபிநவகாளமேகம் — தென்திருப்பேரை

ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்கள் இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

சங்கநூ லாபரணம் அங்கங்க ளிற்றமி
ழணங்குக் கணிந்து கந்தோர்
தார்வேந்த ராலும் மடாதிபர்க ளாலும்பல்
சர்வசங் கத்த ராலும்

தங்குவிரு தார்ந்தவர் பிறையா யிரங்கண்ட
தன்மைச் சதாபி ஷேகர்
தக்கார் தமிழ்ப்புலமை மிக்கார்பல் புத்தகம்
தரையில்வெளி யிட்ட புனிதர்

இங்கெனது நூல்களைக் கவிகளால் மொழிகளால்
ஏற்றமாப் பாராட்டினர்
எஞ்சாமி நாதைய நாமதே யர்தமக்
கெட்டின்பின் எட்டு வயதிற்

கங்கமுறு குன்றத்தி லங்கந்து றந்துதமிழ்
காணன்பர் இதய வீட்டிற்
கனபுக ழுடம்புடன் வசிக்கின்றனர் தரை
கணமுமவர் மறைய விலையே.

மதுரை வித்வசிரோமணி

ஸ்ரீ. வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டியாரவர்கள் இயற்றியவை.

செழிக்கின்ற உத்தமதா னத்திலவ தரித்ததமிழ்த் தெய்வச் சேயே
பழிக்கின்ற செயலொன்றும் என்றுமிலாக் குணக்குன்றே பலர்சந் தேகம்
ஒழிக்கின்ற சாமிநா தையநின தொருகோலம் ஒளித்தா யந்தோ
கழுக்குன்றிற் கணக்கில்லாத் திருக்கோலம் கண்டனையோ கழறு வாயே. (1)

அச்சேறி வரச்செய்த சிலப்பதிகா ரக்கீர்த்தி யடைந்தாய் காண்பான்
மச்சேறி வருவேனை வரவேண்டாம் நான்இறங்கி வருவேன் என்பாய்
நச்சேறி வருவதென நின்பிரிவை ந்யூஸெல்லாம் நவின்ற தந்தோ
எச்சேறி வந்தாலும் இனிமச்சிற் காண்பதுண்டோ இயம்பு வாயே. (2)

நாடெல்லாம் அழுகின்ற துயர்சாமி நாதாநின் நண்ப ரானோர்
வீடெல்லாம் அழுகின்ற தாராய்ந்து வைத்தச்சின் மேவா ஓலை
யேடெல்லாம் அழுகின்ற தெமக்குயிர்தந் தானிறந்தா னென்று தாலக்
காடெல்லாம் அழுகின்ற தந்தோவ னென்றொருசொற் கழறு வாயே. (3)

ஈயாத பரமலோ பியர்கொழுத்து நூறாண்டுக் கிருக்க வைத்தான்
வீயாத பழந்தமிழுக் குயிர்த்தியாகஞ் செயுந்தரும வேலை யானேன்
சாயாத புகழ்ச்சாமி நாதனுக்கு நூறாண்டுந் தந்தா னில்லை
ஆயாத முட்டாட்டா மரையான்போல் அறிவினரார் அந்தோ அந்தோ. (4)

மதிநாறுஞ் சடைமுடியான் மிருகண்டு தவங்கண்டு மதியான் மிக்க
பதினாறு வயதென்ற பாலனைத்தந் தான்அவனப் பாற்பூ சித்துத்
துதிநாறு மலர்வாயான் என்றுமுளான் தமிழ்ப்பூசைத் தொண்ட னீயே
விதிநூறு வயதளித்தா லென்கெடுமத் தறிதலையான் விளங்கா னந்தோ. (5)

குணக்குன்றே அருட்கடலே தமிழ்க்கரசே தவப்பயனே குளிர்ந்தெந் நாளும்
மணக்கின்ற பொன்மலர்கள் பூத்தொளிரும் கற்பகமே மதிவல் லாராய்க்
கணக்கின்றி நிறைகோடி மாணுக்கர் தொழுங்குருவே காண்டற் குன்னை
இணைக்கின்ற வழியுண்டோ இழக்கின்ற விதிதானோ இயம்பாய் அந்தோ. (6)

ஆழமிக்க தமிழ்க்கடலில் அஞ்சாமல் முக்குளித்தங் ககன்றும் நீண்டும்
வீழலுற்ற துறையெல்லாம் புகுந்துசங்கங் களையலசி வெண்முத் தாரம்
வாழவைத்த பொற்சிலம்பு மாமணிமே கலைசிந்தா மணிதந் தாயின்
றேழைமைத்தந் தோஇந்தத் தமிழுலகை வந்துபார்த் திரங்குவாயே. (7)

குண்டுவிழுந் திடுமென்றே உயிரோடுங் குழிபுகுதுங் கூத்தாட் டத்திற்
பண்டுவிழுந் திடும்ராம பாணத்திற் கஞ்சாது பாவா ராயுந்
தொண்டுவிழுந் திடுங்கொலென வேங்கிமயங் கினையல்லாற் றுஞ்சி னாயோ
வண்டுவிழுந் திடுந்தாராய் வாராயெந் துயரகற்ற வாராய் அந்தோ. (8)

செட்டாக நீபதித்த அரும்பழம்பாட் டுகள்படியிண்டு செய்த தெல்லாம்
கட்டாகக் கட்டிஸ்டாம் பொட்டித்தா ராளமாய்க் களித்துத் தந்தாய்
நெட்டாக நின்றுபல கிளைபரப்பி இனித்தகனி நிறைந்து வானம்
மட்டாக வளர்ந்தபஞ்ச தருவேநின் னிழற்குமோ மறைவுண் டந்தோ. (9)

மேனாட்செய் தவப்பயனா யவதரித்துப் புகழ்படைத்த மேலோ னேசெந்
தேனாட்சி செயுங்கிளவிக் கிழவித்தாய் தந்தையரைச் சேவித் தாயோ
வானாட்சி செயுங்குருவாங் கவிச்சக்ர வர்த்தியென வையம் போற்றும்
மீனாட்சி சுந்தரப்பேர்த் தமிழ்க்கடல்கண் டாடினையோ விளம்பா யந்தோ.

திருப்பணிவின் னப்பமெனுந் தருமபுரக் கவிகளெலாஞ்
சேர்ந்தாற் போல்நெட்
டுருப்பணிவைத் துயர்தரமாய்ப் பொருட்பணியா வருக்கும்நன்கு
புகல்வாய் மற்றெம்
திருப்பணியும் பொருட்செலவும் அருட்பொலிவும் பிரசங்கஞ்
செய்கிற் பாய்முன்
கருப்பணிமுன் தமிழ்ப்பணிக்கென் றுருட்பணிவந் தாய்மறைந்தாய்
கடனே யந்தோ. (11)

அன்பால்நீ ஒருதமிழர் காப்பியெடுத் துக்கொளுமா றறைந்தா யோர்கால்
உன்பாலா யிரந்தமிழர் காப்பியெடுப் பாருளரென் றுரைத்தேன் ஐயா
நின்பால்மே வினர்க்கந்தச் சிலேடையொரு பொருட்டாக நிகழ்த்தி னாயே
தென்பால்வே றகத்தியனா யிருந்தகலா நிதியெப்பாற் சென்றாய் அந்தோ.(12)

அராப்பள்ளி அணைகிடக்காச் சுத்தப்பாற் கடற்குநிக ரான மேன்மைச்
சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரசற் குருவைப்போய்ச் சேர்ந்தெந் நாளும்
இராப்பள்ளி கொள்ளாமல் உண்ணாமற் கற்றுயர்ந்தாய் ஏனோ மீண்டு
வராப்பள்ளி கொண்டிருப்பாய் மஹாமஹோ பாத்யாய வள்ளால் அந்தோ.

பத்துப்பாட் டச்சிட்ட பரமகலா நிதியேயென்
பாட்டைப் பார்த்து
முத்துப்பாட் டென்பாய்செம் பவளப்பாட் டென்பாய்நன்
முழுமா ணிக்கக்
கொத்துப்பாட் டென்பாய்நண் பரைப்பிரிவென் னுந்துயர்செய்
கொடிய *வேலை
வைத்துப்போட் டுச்சொல்லா தேகினைநல் லோர்க்கிதுவோ
மார்க்க மந்தோ. (14)

மாறுமுக நிருதர்குலம் மடியவடி வேலெடுத்த வரதன் பேர்கொள்
ஆறுமுக நாவலராங் குணமணியுங் கலாநிதியாம் ஐயா நீயும்
வேறுமுக மாய்த்திரிந்த நூல்நூறு யிரமுகமாய் விளங்க அச்சில்
ஏறுமுக மாகவைத்தீர் இருவீரும் இனமிருக்கில் இனிது மாதோ. (15)

சாக்கிரத்தில் உனைக்கண்டேன் சவுக்கியத்திற் கெழுதென்றேன்
சரியென் றேவி
யாக்கிரத்திற் கொப்பாகக் குமுறியெழுந் தெனைநோக்கி
அஞ்சேல் ஐய
சீக்கிரத்தில் எழுந்திருப்பே னென்றாய்அம் மறைதேறேன்
திறந்து மெய்ம்மை
வாக்குரைத்தால் வந்திருப்பேன் மனமாறும் ஏதோமறைத்தாய்
வாழி மாதோ. (16)

சித்திரபா நுவ்ஆண்டு சித்திரையா முன்மாதம்
சித்திரமாம் பத்தாறுந் தெய்தியினில்—அத்தமென்ப
தண்பொறைமிக் கானெங்கள் சாமிநா தப்பெரியோன்
நண்பரைவிட் டுப்பிரிந்த நாள்

நாலெழு தேதிநல்ல நாலாமா தம்பெரிதும்
மேலே புகழோங்கி மேவுகின்ற—காலமுள்ள
நாலுபத்தி ரண்டாண்டில் நற்சாமி நாதவள்ளல்
சீலமொடு மேற்போந் தினம்

---

*1 வேலாயுதத்தை. 2 தொழிலை. 3 கடல்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைமாணவரும்
இராமநாதபுரம் ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழாசிரியருமான
ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள் இயற்றியது.

அந்தோவித் தமிழுலகின் அருந்தவமாய் வந்துதமி ழணங்கைப் போற்றி
முந்தார்வத் துடனவடன் அணிகள்பல கரவாமல் முயன்று தந்த
நந்தாத புகழ்ச்சாமி நாதனெனும் நல்லோனிந் நாடு முற்றும்
சிந்தாகு மெனலாய சிந்தாகு லஞ்சேர்த்துச் சென்ற னம்மா. (1)

இழுக்கொன்றி லாதபுகழ்ச் சாமிநா தப்பெரியோய் யாரும் போற்ற
விழுக்குன்றின் மிளிர்கின்ற விளக்காகி மேவுமுனை விழைந்து தன்பால்
வழுக்குன்றி மறையவொளி வளர்க்கின்ற தமிழன்பின் வருகென் றுனே
கழுக்குன்ற முடையான்றன் கழல்சேர்ந்த தென்னென்று கழறு வாயே. (2)

தாயாகி யறிவூட்டு தமிழணங்கு மகிழவரு தலைமை சான்ற
சேயாகித் தாய்பணியின் மேற்பிறிதொன் றிலதென்று தேர்ந்து நின்று
நோயாகி வருஞான்றும் ஓயாது கடனாற்றல் நோக்கி யிங்கு
மீயாகி நின்றனையால் மீயாகிச் சென்றனையென் விளம்பு வாயே. (3)

வான்கண்ட புகழுடல மருவிநனி யுறைகின்ற வள்ளால் நின்னை
யான்கண்ட பொழுதெல்லாம் நின்கவிக ளியம்புகவென் றினிது கேட்டுத்
தேன்கொண்ட மொழிகொண்டு பாராட்டு மியல்பொன்று திறமின் றுன்னில்
ஊன்கொண்ட உடலுருக உளமுருகக் கரைவிப்ப தொன்று மையா. (4)

வேறு

உம்பருல கின்மே லுயர்ந்தோங் குலகடைந்த
தம்புவியிற் காணு தயர்கின்றோம்—இம்பர்
அணிவான் புலவ ரகமகிழச் சிந்தா
மணியீந்த சிந்தா மணி.

மதுரையிலுள்ள இராமேசுவரதேவஸ்தான மஹாபாடசாலைத்
தலைமைத்தமிழாசிரியர்

ஸ்ரீ. T. N. அப்பனையங்காரவர்கள் இயற்றியவை.

---

1 தமிழ்க்குழவி நீங்கியது தன்றாயை யந்தோ
தமிழ்க்குமரி தன்கேள் தணந்தாள்—தமிழ்க்கிழவி
தன்னோர் தவச்சேயாம் சாமிநா தற்பிரிந்தாள்
அன்னோவிங் காற்றுவா ரார்.

2 உத்தம தானத் துயர்சாமி நாததமிழ்ப்
புத்தக தானம் புரிந்தீந்தாய்—அத்த
இருந்தமிழி னின்ப மிமையவர்தாம் வேட்ப
விருந்தமிழ்தும் வேண்டினையோ விண்.

3 சிந்தை செவிவாயிற் றித்திக்குந் தேமொழியால்
அந்தர வானோர்க் கமுதருள்வாய்—எந்தைநீ
பூமிநா டோறும் புலம்பப் புலம்பிரிதல்
சாமிநா தாதகவோ சாற்று.

4 நீபுலவர் காப்போல் நிழல்செய்தாய் நீணிலத்தில்
நீபுலவர் சங்க நிதியளித்தாய்—நீபுலவர்
சிந்தா மணியோடு சீர்த்ததமிழ்ப் புத்தமுதுந்
தந்தாயெம் சாமி நாதா.

5 வந்தான் தமிழ்வளர்த்த மால்சாமி நாதவள்ளல்
வந்தான் தமிழ்ப்புலவன் வான்விழைந்து—வந்தானென்
றும்ப ருவந்தேற் றுபசரித்த பேரரவம்
இம்ப ரெதிரொலிக்கு மின்று.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய

இரங்கற் கலிவெண்பா.

---

1 சத்துவநன் னூலோர் தழைத்தினிது வாழ்தலினால்
உத்தம தானபுர மென்றுலகோர்—நித்தநித்தம்

2 சொல்லித் துதிக்குந் துகளறுசீர் நற்பதியிற்
கல்விக்குக் கும்பனெனக் கம்பனென—நல்வித்

3 தகர்புகழ நான்மறையோர் சந்ததியி லென்றும்
பகர்வரிய கீர்த்தி படைத்தோய்!—நிகரரிய

4 செங்கண்மா லேயித் திருவுருக்கொண்டம்புயனை
அங்கண்மா ஞாலத் தளித்தனனென்—றிங்குமிகக்

5 கற்றோர் சொலும்வேங் கடரமணப் பேர்புனைத
லுற்றோன் றவத்தா லுலகுதித்தோய்!—சொற்றோறும்

6 இன்பம் பயக்கும் இயல்சேர் தமிழ்புரக்குந்
துன்பம் பயவாத் துறைசையினில்—அன்போ

7 ருருவெடுத்த தென்ன வுவணுறைந்த மேலோன்
கருவெடுத்த நாட்டொடங்கிக் கற்போர்க்—குரையடுக்கும்

8 மீனாட்சி சுந்தரப்பேர் வித்தகன்பாற் கல்விகற்றுத்
தானாட்சி மிக்க சதுமறையோய்!—மேனாட்டும்

9 அன்னதிருவா வடுதுறையா தீனத்து
மின்னு குருமணியாய் வீற்றிருந்து—தன்னிகரில்

10 சைவந் தழைக்கத் தகுவனவெ லாம்புரிந்து
தெய்வத் தமிழ்வளர்க்குஞ் சீர்த்தியொடு—மைவைத்த

11 கண்டத்தான் பஞ்சாக் கரவுபதே சம்பகர்ந்து
தொண்டர்க்கு வீடருளுந் தூய்மையுடன்—பண்டுறைந்த

12 பீடார் புகழ்ச்சுப் பிரமணிய தேசிகன்பால்
வீடாத நண்புமிக்க மேதக்கோய் !—பாடாரும்

13 பூவுலகந் தன்னிலுமோர் பொன்னகர முண்டெனவே
தேவுலகம் போற்றுறுசீர்ச் சென்னையினில்—மேவு

14 திருவல்லிக் கேணி திகழ்திருவெட் டீசு
வரன்பேட் டையிலுலகோர் வாழ்த்து—வரனுர்ந்த

15 பிள்ளையார் கோவில் பிறங்கு பெருந்தெருவிற்
கள்ளையார் வண்டினம்போற் கற்றோராம்—வெள்ளமுறு

16 நன்னிதியா ருந்த்யாக ராச விலாசமெனும்
பொன்னிதி யாரும் புதுமனையிற்—சென்னியரும்

17 பாண்டியரும் சேரலராம் பார்த்திபரும் காத்ததமிழ்
ஈண்டினிதெந் நாளு மெழில்பெறவே—வேண்டுவன

18 எல்லாம் புரிந்திங் கியலிசையும் நாடகமும்
வல்லா னெனவாழ்ந்த மாபெரியோய் !—தொல்லோர்சொல்

19 வேணுவன நாத விலாஸச் சிறப்புநலம்
பூணு குடந்தைப் புராணமிக—மாண

20 மதிமத்தி யார்ச்சுனப்பேர் மான்மியம்நூல் வல்லோர்
துதிசிவ கன்சரிதந் தொன்மை—பதிகச்சி

21 ஆனந்த ருத்ரேச ஐயன் திருமுன்னர்
வீனந்து வண்டு விடுதூது—மானந்

22 தழைக்குந் திருமயி லைத்திரிபந் தாதி
பழக்கந் தருபத்துப் பாட்டின்—முழக்கமுறு

23 நன்மூ லமுமுறையும் நற்றண்ட பாணிப்பேர்
பன்னு மெழில்விருத்தம் பாங்குபெற—மின்னும்

24 சிலப்பதி காரந் திருப்பெருந்து றைப்பேர்ப்
புலப்பகையைப் போக்கும் புராணம்—நலத்தகையோர்

25 போற்றுபுற நானூறு போதப் புறப்பொருளைச்
சாற்றுவெண்பா மாலைபுத்தன் றன்வரலா—றுற்றும்

26 மிகுபவுத்த தன்மம் விழைபவுத்த சங்கம்
நகுமணி மேகலையக் நாமம்—நிகழும்

27 அணிசேர் கதைச்சுருக்கம் ஐங்குறுநூறு
துணிசேகா ழிக்கோவை தூயோர்—பணியும்

28 திருவா வடுதுறைப்பேர் செப்பவரு கோவை
மருவார்ந்த வீர வனப்பேர்—ஒருவாத

29 தன்மைப்பு ராணந் தணிகைத் திருவிருத்தம்
வன்மைத் திருப்பூ வணநாதர்—நன்மை

30 மருவு முலாச்சூரை மாநகர்ப்பு ராணம்
நரர்பரவு காளத்தி நாதர்—உருகுமுலாப்

31 பாரோர் புகழ்பதிற்றுப் பத்தென்னு மோர்பெருநூல்
ஆரூரர் லீலை யவரூரின்—பேருலா

32 மன்னு திருவால வாயுடையா ராடலினைப்
பன்னும்பு ராணம் பகர்வரிய—தென்னும்

33 தெளிவார் தனியூரின் செய்யபு ராணம்
ஒளியார்ந்த தேவை யுலாமீக்—களியார்ந்த

34 மண்ணிப் படிக்கரைப்பேர் வாய்ந்த புராணஞ்சீர்
எண்ணுசொற்கோ வாரியினின் றேகரையை—நண்ணு

35 திருப்பா திரிப்புலியூர்ச் சீர்த்தபே ரார்ந்த
விருப்பார் கலம்பகம்நல் விண்ணோர்—தருப்போன்ற

86 மீனாட்சி சுந்தரப்பேர் வேள்பிரபந் தத்திரட்டுக்
காணுட்சி கொண்டபத்திக் கண்ணப்பர்—ஊனுட்சிக்

37 கண்ணிடந்து வைக்கக் கதியளிக்குங் காட்சிதரு
புண்ணியர்கா ளத்திப் புராணமுயர்—வெண்ணெழுத்தாம்

38 நன்னூற் குயர்மயிலை நாத ருரைத்தவுரை
தொன்னூற் பரிபாடல் தூய்மைதரு—முன்னும்

39 உதயணன்கதைச்சுருக்கம் ஓங்குபெருங் காதை
இதயவிருள் நீக்கியொளி யீயும்—உதயன்

40 கதிர்நிகர்நன் னூற்சங் கரநமச்சிவாயம்
சதிர்பெறுசங் கத்தமிழுஞ் சால—முதிருமதன்

41 பிற்காலத் தின்றமிழும் என்னும் பெயருடனே
தற்காலத் தார்க்குத் தருமொருநூல்—மிக்கோர்கள்

42 பாடுதக்க யாகப் பரணி பரிந்துதமிழ்
நீடவிடு தூது நிகரில்லாப்—பாடல்மிகு

43 பத்துப்பாட் டின்மூலம் பாரி லறிஞரெலாம்
நத்துமது ரைச்சொக்க நாதருலாச்—சித்தர்முத்தர்

44 கூடித் துதிகடம்பர் கோயிலுலாக் கோதறுசீர்
நாடுகொட்டை யூரில் நயந்துபுகழ்—தேடு

45 சிவக்கொழுந்து தேசிகர்முன் செய்பிரபந் தங்கள்
பவக்குறும்பெ றிந்தோர் பரவும்—தவப்பெரிய

46 நன்றுதரு பத்மகிரி நாதருறை சந்நிதிமுன்
தென்றல்விடு தூதென்று செப்புநூல்—மன்றவிழை

47 பேறு தருபழநிப் பிள்ளைத் தமிழெனுநூல்
ஆறு புனைசடையெம் அண்ணலாம்—ஈறிலா

48 நன்ம துரைச்சொக்க நாதர்மும்ம ணிக்கோவை
புன்மைதவிர்த் தன்பு புரிவோர்க்கு—நன்மைதரு

49 சங்கர லிங்கவுலாச் சார்திருக்க ழுக்குன்ற
இங்கிதச்சி லேடைவெண்பா வென்னுநூல்—துங்கமிகு

50 பாச வதைப்பரணி பண்பார் சிராப்பள்ளி
நேசமிகு கல்வி நிலையமெனும்—தேசிகனும்

51 மீனாட்சி சுந்தரவேள் மேன்மைச் சரித்திரங்கள்
வானாட்சி கொண்டோரும் வந்துவந்து—தேனாட்டு

52 காமர்நக ராஞ்சங் கரநயினார் கோயிற்பேர்த்
தோமறுமந் தாதியெனச் சொல்லுநூல்—நேம

53 வலிவல மும்மணிப்பேர் வாய்ந்தசெழுங் கோவை
நலிவறு விளத்தொட்டி நாமம்—நிலவும்

54 திருமிகுபு ராணம் திருவிலஞ்சி வாழும்
முருக னுலாவெவரு முன்னும்—பொருவில்

55 பழமலைக் கோவை பகரு மிவைபோல்
அழகுறுநூல் பற்பலவிங் காய்ந்தும்—தொழுதகைய

56 பன்னூற் பரிசோ தனைபுரிந்து மாக்கியுமத்
தொன்னூல்கள் செல்வாயிற் றேயாமல்—நன்னர்

57 எழுதா வெழுத்தினிலிட் டெம்மவர்க்குத் தந்த
முழுதாய்ந்த வேத முதல்வா !—பழுதூரப்

58 பட்ட பழந்தால பத்திரமா நூல்பலவிங்
கிட்ட முடன்சிரம மெண்ணமல்—அட்ட

59 திசையினிலுஞ் சென்றுசென்று தேடிக் கொணர்ந்து
வசையில் வகையுடைய வாக்கி—யிசைமீப்

60 பெறும்பெரும்பே ராசிரியப் பேர்படைத்த மேலோய் !
நறுந்துணர்ப்பைங் கற்பகம்போல் நாளும்—உறும்பலர்க்குச்

61 சொன்னிதியும் பொன்னிதியுந் தோற்றமுட னேயளித்த
நன்னிதியே ! கற்றவர்கள் நாயகமே !—மன்னுபுகழ்

62 நல்லோர் தொழுஞ்சாமி நாத வரோதயனே !
எல்லோர்க்கும் நன்றே யியற்றுவோய் !—பொல்லாத

63 சித்திர பானுவினிற் சித்திரையீ ரெட்டென்னும்
இத்தினமோ நின்னை யிழந்ததினம்—இத்தினமோ

64 சங்கமும் சங்கத் தமிழும் தமிழ்நாடும்
திங்களிலா வான்போற் றியங்குதினம்—அங்கனக

65 மாட மிருக்க வழுத்துகழுக் குன்றமோ
ஏடவிழ்தா ரீசனடி யெய்துமிடம்—வீடருளும்

66 கோகழியா தீனத்திற் கொண்டிருந்த பத்திமையோ
எகுழியும் அந்நாம மேற்றமடத்—தாகுதிசெய்

67 மாமறையோர் சூழ மடாதிபருஞ் சூழ்ந்திருப்பப்
பூமழைவான் றேவர் பொழிதரவே—சாமிநீ

68 மண்ணுலக வாழ்க்கை மறந்தரன்றாள் மன்னும்வணம்
விண்ணுலக வாழ்க்கை விழைந்தனையால்—அண்ணாவோ

69 என்றுநினைச் சுந்தரப்பே ரேய்ந்த அனுசனினி
யென்றழைப்ப தத்தாவென் றின்பமுடன்—நின்றவத்திற்

70 றேற்று கலியாண சுந்தரப்பேர்த் தூயசுதன்
ஏற்ற முடனழைப்ப தெந்நாள்—நாற்றிசையும்

71 அந்தோ நினைப்பிரிந்திங் காற்றுமோ மாற்றலர்க்குஞ்
சிந்தா குலந்தவிர்க்குஞ் சீமானே!—நந்தாத

72 மண்ணாட்டி லேடு நிதந்தேடும் மாண்பதுபோல்
விண்ணாட்டுந் தேட விரைந்தனையோ—புண்ணியனே!

73 நூறாண் டிவணுறைந்து நுண்பொருளெம் போல்வார்நற்
பேறாண் டிடவருளும் பெற்றியைவிட்—டாறாத

74 கண்ணீருங் கம்பலையு மாகிக் கரைந்துருக
எண்ணாதெண்பா னெட்டி லேகலென்னே—வுண்ணீர்மை

75 வெண்ணீறுங் கண்டிகையு மேவுதிரு மேனியையாங்
கண்ணாரக் கண்டு களிகூர—எண்ணாயோ

76 முப்புரிநூ லெங்கே முழுவயிரக் கண்டியெங்கே
திப்பியநூல் நீங்காத செங்கையெங்கே—செப்பரிய

77 தேக திடந்தளர்ந்துஞ் சிந்தைத் திடந்தளரா
தாகமநூல் வேதநூ லாதியன—பாகனைய

78 இன்மொழியாற் கற்போ ரிதயமகி ழக்கூறிப்
பொன்மொழிபோற் போற்றப் புரிவதெங்கே—பன்மொழிநூல்

79 ஆசங்கை கொண்டோ ரகமகிழத் தென்மொழியால்
மாசங்கை தீர்க்கும் வசனமெங்கே—தேசெங்கே

80 எப்பிறப்பிற் காண்பே மிவையெல்லா மெங்கோவே!
மைப்புயல் வானில் மறைந்ததுபோல்—இப்புவியிற்

81 பூத வுடல மறைந்தாய் புகழுடம்பு
வீத லுறுமே விளங்குவோய்!—ஓது

82 துணையிழந்தான் சுந்தரப்பேர்த் தோன்றல்கற் றோர்கண்
ணிணையிழந்தார் நீதவத்தா லீன்ற—இணையில்

83 கலியாண சுந்தரப்பேர்க் கண்ணியமிக் கார்ந்தோன்
ஒலியார் கடலுலகி லும்பர்—சலியாத்

84 தருவனைய தந்தை யிழந்தான் தமிழாம்
உருவனைதன் காத லுறுநல்—ஒருசுதனை

85 இந்நா ளிழந்தா ளியற்றமிழ்நூல் தாயிழந்த
திந்நாளை யெந்நாளென் றெண்ணுறுவேம்—பன்னூலும்

86 ஈண்டுதமிழ்த் தொண்டுபுரிந் தெங்களைநீ காத்ததுபோல்
ஆண்டுந்தெய் வீகநிலை ஐயவடைந்—தாண்டருளல்

87 வேண்டும் விடையூரும் வித்தகனின் றன்னுன்மா
ஈண்டியதன் றுணிழற்கீ ழெய்தியே—காண்டகைய

88 பேரின்ப வெள்ளப் பெருவாரியிற் சாந்தி
யாரின்ப மார அருணம்.

நேரிசைவெண்பா

சித்திர பானுத் திகழ்சித் திரைபதினு
றுத்தமச்சேய் நாள்பூர்வத் தொண்பதின்மூன்—றுற்றதிதி
நற்குணஞ்சா ருஞ்சாமி நாதத் தமிழ்முனியாஞ்
சிற்குணன்வீ டுற்ற தினம்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்
செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றியவை.

ஓவாது சங்கத் துயர்புலவோர் நல்குதமிழ்ப்
பாவால் உலகப் பரப்பினிலஞ் ஞானவிருள்
மேவாது நீக்கும் வியன்ஞான பானுவினை
ஆவா உலகிழந்த தையகோ வையகோ. (1)

வேலை யிடைத்தோன்றி வெற்பின்மறை வெங்கதிரும்
காலை யெழுதல் கடவாது; செந்தமிழாம்
வேலையிடைத் தோன்றி வியன்கமுக்குன் றின்மறைந்த
மேலை விரிகதிரோன் மீளாவா றென்னேயோ. (2)

மண்மிசையே சங்க நிதிவழங்கி வாழ்வித்தெம்
உண்மிசையே சிந்தா மணியா யுவந்துறைவாய்
கண்மிசைநீங் காத கவின்சாமி நாதவள்ளால்
விண்மிசைநீ சென்ற விரகென் விளம்புவையே. (3)

சங்க நிதியாந் தமிழ்நூ லெலாம்பதிக்கச்
சங்க நிதிகொணரத் தான்வான் புகுந்தனையோ
அங்குறையுஞ் சிந்தா மணிக்கே யகன்றனையோ
தங்கு புகழ்ச்சாமி நாத தயாநிதியே. (4)

மாசில் குரவர் மலர்முகங்கண் டின்புறவோ
தேசுமிகு மீநாட்சி சுந்தரர்பாற் சேர்வதற்கோ
நேசமுறு பாண்டித் துரையரசை நேர்வதற்கோ
ஆசையுடன் நீவா னடைந்த துரையாயே. (5)

வந்தான் நமது தமிழ்வளர்த்த மைந்தனென்று
மந்தா கினியணியும் வள்ளலெதிர் கொண்டனனோ
கொந்தார் கடம்பன் குறுகியெதிர் கொண்டானோ
சிந்தா மணியளித்த தேவே யுரையாயே. (6)

எக்கால் உனது திருமுகங்கண் டின்புறுவோம்
எக்காலுன் இன்மொழிகள் கேட்டுளிரு ளோட்டிடுவோம்
திக்கா லடங்காத சீர்த்தித் தினகரனே
தக்கார் புகழ்சாமி நாத தயாநிதியே. (7)

கற்பாருங் கேட்பாரும் இல்லாத காலத்தே
பொற்பார் தமிழ்நூற் பொருளா தியதெளித்தே
நற்பா வலர்பலரை நானிலத்தே தோற்றுவித்து
நிற்பார் நினைப்போல் இனியார் நிகழ்த்துவையே. (8)

ஊணுறக்க மின்றியலைந் தூறூர் தொறும்முன்னோர்
மாணுறச்செய் தீந்தருளும் வான்றமிழ்நூல் ஈந்தோரும்
நாணுறவே சீரோடு நல்கித் தமிழ்மடந்தை
பூணுறவே நின்போற் புரிவார் இனியாரே. (9)

என்றும் தமிழ்வளர்தற் கேற்றவெலாம் செய்திடுநீ
இன்றதுநீத் தீசன் கலமுடைந்த தென்னேயோ
இன்றதுநீந் தீசன் கழலடைந்தின் புற்றிடினும்
நன்று தமிழ்வளர நாளும் அருளுதியே. (10)

வேறு

சாமி நாத தயாநிதி தந்திலனேல்
பாமி னுளணி யாய பழந்தமிழ்நூல்
பூமி மீது புனல்கனல் வெங்கரையா
னுமி வற்றால் அழிவது திண்ணமரோ. (11)

வேறு

பத்துப் பாட்டும் பழம்பரி பாடலும்
சித்த மள்ளுஞ் சிலப்பதி காரமும்
மெத்து சீர்மணி மேகலை நூலுடன்
இத்த ரைக்க ணெடுத்தெவ ரீகுவார். (12)

பீடு நீடு பெருங்கதை செந்தமிழ்
நாடு பாடுசிந் தாமணி நற்புறப்
பாட லோடு பதிற்றுப்பத் தும்பரிந்
தேடு தேடி யெடுத் தெவ ரீகுவார். (13)

ஐய ஞரித ஞர்தரு மாலையும்
செய்ய ஐங்குறு நூறுந் தெளிதமிழ்ச்
செய்யு ளாய குறுந்தொகைச் சீரும்நன்
கையம் நீங்க அளித்திடற் கார்வலார். (14)

ஆல வாயண்ண லாடல் அரியநன்
னூலை யாய்சங் கார்தரு நுண்பொருள்
வேலை மோதும் மயிலையர் விள்பொருள்
சால ஆய்ந்து தருபவர் யாவரே. (15)

தக்க யாகப் பரணியும் சால்பினுன்
மிக்க மீநாட்சி சுந்தர வேள்தரும்
தக்க பாடற் றிரட்டும் சரிதமும்
இக்கெ னப்புவிக் கீபவர் யாவரே. (16)

வேறு

பொன்னாலும் மணியாலும் புலத்தாலும் மேம்பட்டார்
புவியிற் பல்லோர்
இந்நாளும் உளரெனினும் அவரையெலாம் நன்குணர்ந்திங்
கியம்புங் காலை
எந்நாளும் உனைப்போலத் தமிழ்ப்பணியி லீடுபட்டார்
எவரே ஐயா
நன்னுவ லோர்பலரும் புகழ்சாமி நாதவள்ளால்
நவிலு வாயே. (17)

புலவரிடை யினைந்திருப்பாய் புரவலர்பால் வீற்றிருப்பாய்
பொற்பான் மிக்கு
நிலவுபல நூலிடையே நிறைந்திருப்பாய் இனந்தழுவி
நிற்பாய் என்றும்
நலமிகுமா ணவர்குழுவில் நன்கிருப்பா யெம்சாமி
நாத வள்ளால்
நிலமிசையே இஞ்ஞான்று நீயிருக்கு மிடமறிய
நிகழ்த்து வாயே. (18)

முன்னாளில் வாழ்ந்ததமிழ்ப் புலவர்வர லாறனைத்தும்
மொழிய வல்லாய்
இந்நாளில் அவ்வரலா றெடுத்தியம்பு வாரெவரென்
றிரங்க கில்லேம்
நன்னாவ லோர்பலரக் குறைமுடிப்பா ருளரிந்த
ஞாலத் துள்ளே
உன்னாலுஞ் சொலற்கரிய வுன்சரிதம் முற்றுவிப்பார்
உளரோ வையா. (19)

மேயினவே செய்தொழுகும் விண்ணாட்டுப் புலவர்குழாம்
மெலிந்து நைந்து
மாயுநிலை தீரவொரு கடுநஞ்சுண் டமுதளித்த
வள்ளல் பொற்றாண்
மேயினநீ இன்புற்றங் குறைந்திடினும் அவ்விறைபால்
விழுச்சீர் மிக்க
மாயிருஞா லப்புலவர் மாயாத வரம்வேண்டி
வாழ்விப் பாயே. (20)

பாலபாடசாலைப் பரிசோதகர் (ரிடயர்டு)

வே. முத்துஸாமி ஐயர், எம். ஏ. எல். டி. அவர்கள் இயற்றியவை.

கோச்சகக்கலிப்பா

ஒரோஅடி மிக்குவந்தது

1 செந்தமிழின் பெருமணியே! செழுமறையோர் குலமணியே!
சிந்தைநிறை சிவபக்தி சிகாமணியே! விடாமுயல்வும்
[1]சிந்துஎனப் பொறையுமொளிர் திருமணியே! தமிழகம்நீத்
தெந்தையெனும் குருமணியே! எவ்விடம்நீ ஏகினையோ?
எளியேங்கள் ஏக்கமுற எவ்விடம்நீ ஏகினையோ?

[1]சிந்து - கடல்; சிந்து என விடாமுயல்வும் பொறையும் எனக் கூட்டுக.

2 சிந்தா மணிமுதலாத் திகழ்சங்க நூல்கள்தரும்
சிந்தா மணியே! சங்கீத சிரோமணியே!
சிந்தாது சிதையாது திறம்படநூல் பலதருநீ
சிந்தா குலம்விளைத்துச் சென்றனையே ஐயாவே!
சீர்த்தி நிலைநிறுத்திச் சென்றனையே ஐயாவே.

3 பங்கமிலாத் தமிழகத்தின் பண்டைச் சரிதநலம்
சங்கநூற் றொகைதிருவித் தந்ததனாற் பூமிசைக்கே
பொங்குநீதி யனைத்தினுக்கும் பொருவரிய புகழ்வளரும்
சங்கநிதி யாயினைநீ தயாநிதியாம் சற்குருவே!
சாந்தநலம் உருக்கொள் தயாநிதியாம் சற்குருவே!

4 தமிழ்மகளும் கலைமகளும் தமக்குரிய பெண்ணுருநீத்
திமிழ்திரைநீர் சூழுலகில் இற்றைநாள் ஆணுருவில்
அமிழ்தென நூற் கடல்குடையும் ஆற்றலொடு வந்ததெனக்
கமழ்தருநற் புகழ்க்குருவே! கரந்தெங்குக் கடுகினையோ?
காவலர் நாவலர் மறுகக் கரந்தெங்குக் கடுகினையோ?

5 வண்டமிழ்தான் வசனநூல் வரலாற்று நூல்களிவை
கொண்டிலதால் எனப்புகலும் குறையினை **ஆசான்சரிதை**
மண்டுபுகழ்ச் **சுயசரிதை** யாதியினால் மாண்புமிகு
பண்டையர்தம் நற்சரிதம் பலவற்றால் மாற்றினையே
பால்தேன்பா கெனுமுறைநூல் பலவற்றால் மாற்றினையே.

6 ஆவடுதண் டுறைமடத்தின் அதிபர்களும் கவியரசாம்
பாவுடைவண் குருபரனும் பல்கலைதேர் சாலைகளின்
மேவரிய தலைவர்களும் மிகவுகக்கும் இங்கிதத்தால்
[2]ஓவவிலாப் பெருமதிப்புற் றோங்கினையே உத்தமனே!
உலகமெலாம் தமிழ்பரப்பி ஓங்கினையே உத்தமனே!

[2]ஓவல் - நீங்கல்.

7 உத்தம **தானபுரம்** ஊராம் உனைப்பெற்றோர்
[1]சத்தக **வேங் கடசுப்ர மணியர் சாகுவதி**யாம்
வித்தக மீனுக்ஷி சுந்தரராம் குரு நின்பேர்
[2]நத்தகைச் **சாமி நாத**னென ஓங்கினையே
ஞாலத் தொருசாமி நாதனென ஓங்கினையே.

[1]சத்தகம் - சத்தான மனம்; [2]நத்தகை - சிறத்த; தகை - தகுதி.

8 நின்கல்வி குணப்பெருமை நிறையுணர்ந்து காஞ்சிமடத்
தன்புறு **சங்கர ஆசான்** அளித்த "**கலாநிதி**"ச்சீரும்
மன்புகழும் "**மகாமகோபாத்யாயர்**" "**டாக்டர்**" முதல்
நன்பதமும் எம்சொல்லால் நவிலரிதே நல்லோயே!
நாளுமெவர் சொல்லாலும் நவிலரிதே நல்லோயே!

9 [1]கேளும் கிளைநட்பும் [2]செழுமிக் கிளர்செல்வத்
தாளும் அறிஞர்பலர் அருமதிப்புற் றாயெனினும்
நாளும் பெருநினைவும் நயத்தகுநல் எளிதகவும்
[3]கோளெனக் கொண்டுயர்ந்தாய் குணக்குன்ற மன்னவனே!
குவலயத்தார் பாராட்டும் குணக்குன்ற மன்னவனே!

[1]கேள்-சுற்றம்; [2]செழுமி-நெருங்கி; [3]கோள்-கொள்கை

10 நாடு நகர்புகழ நல்லோ ரெலாம்புகழ
நீடுவாழ்ந் தரும்பணிகள் நிகழ்த்தியநீ அமைதியுடன்
வீடுசென் றாய் அண்ணல்! வியத்தகுநின் தண்ணளியால்
பீடுபெற்றுன் சந்ததியார் பெருவாழ்வு வாழியவே
பெட்புடன்நம் செந்தமிழும் பெருவாழ்வு வாழியவே.

நேரிசைவெண்பா

சித்திர பானுவெனும் ஆண்டிற் சிறக்குமதி
சித்திரைபத் தோடாறும் தேதிசெவ்வாய்—இத்தினம் நம்
நர்பன் தமிழ்ச்சாமி நாதனெனு மாமறையோன்
நம்பன் அடிநிழல்சேர் நாள்.

கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

உசo-ஆம் பக்கத் தொடர்ச்சி.

மீட்சிப்படலம்

சீதை சிறைவாசத்திலிருந்து மீண்டு இராமனை அடைந்ததையும், இராம சீதா லக்குமணர் வனவாசத்திலிருந்து மீண்டு அயோத்தியை அடைந்ததையும் கூறுவது.

விபீடணனுக்கு இலக்குமணன் முடிசூட்டுதல்

[இராமன், 'விபீடணா! வருந்தாதே' என்றுகூறி, 'இலக்குமணா! நீ சுக்கிரீவன் அனுமான் முதலிய வானரவீரரொடு இலங்கைக்குச் சென்று, வேதவிதிப்படி விபீடணனுக்கு முடிசூட்டுவாயாக' என்று கட்டளையிட்டான்.* அப்போது, கடல்நீர், கங்கைநீர் முதலிய புண்ணியதீர்த்தங்களையும் கிரீடத்தையும் சிங்காதனத்தையும் முடிசூட்டுதற்குவேண்டிய மற்றையவற்றையும் தேவர்கள் கொண்டு வந்துசேர்த்தனர். அவர்கள் தாங்கள் கொணர்ந்த புண்ணிய தீர்த்தங்களால் விபீடணனுக்கு அபிடேகஞ்செய்தனர். அவனுக்கு இலக்குமணன் முடிசூட்டினன்.

---

* 'இராமபிரான் தனது சிறியதாயாகிய கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்திருந்த வரத்தை நிறைவேற்றுதற்பொருட்டுப் பதினன்குவருடம் வனவாசஞ்செய்ய உடன்பட்டுவந்தனனாதலால், அங்ஙனம் காட்டில் வசித்தற்கேயுரிய அக்காலத்தில் நகரப்பிரவேசஞ்செய்தல் தகாதென்ற கருத்தினால், தான் இலங்கையினுட்செல்லாமல், தம்பியைச் சென்று முடிசூட்டக் கட்டளையிட்டனனென்க. முன்பு சுக்கிரீவனுக்கும் இலக்குமணனைக் கொண்டே முடிசூட்டி இராமன் கிஷ்கிந்தாபுரியிற் செல்லாமை காண்க' வை. மு. கோ.

விபீடணன் சிங்காதனத்தில் வீற்றிருத்தல்

வாத்தியங்களும் தேவதுந்துபியும் முழங்க, வேதியர் ஆசி கூறத் தேவர்கள் பூமழை பொழிய, உறவினர் (ஆன இராக்கதர்) உற்சாகங்கொண்டு ஆரவாரிக்க, ஒரு கரியமலை, சூரியனை உச்சியிற் கொண்டு, தீப் (பிழம்பு) போலச் சொலிக்கின்ற இரத்தின(ம் இழைத்த) ஆசனத்தில் (வீற்றிருந்து) விளங்குதல்போல், (கரிய பெரிய காத்திரமுடைய) இலங்கைவேந்தன் (ஆன விபீடணன்) சிங்காதனத்திலே விளங்கினான்.*

விபீடணன் இராமனிடம் வந்து வணங்குதல்

விபீடணன், சிங்காதனத்தைவிட்டெழுந்து, இலக்குமணன் பாதங்களில் விழுந்து பணிந்து, 'தமியேன் இராமபிரானைத்தரிசித்து வணங்கித் திரும்பிவரும்வரை இந்நகர அரசாட்சியைச் செய்தல் வேண்டுமென்று விண்ணப்பித்து, இராமனிடஞ்சென்று வணங்கினான். இராமன், விபீடணனைத் தழுவி, ஆசீர்வதித்து, 'இராசநீதி முறைக்கும் தருமமார்க்கத்துக்கும் பொருத்தமாக அரசாட்சி செய்வாயாக' என்றுகூறி, விடைகொடுத்தனுப்பினான்.

---

*[illegible]குன்று கதிரினைச் சூடியோர்
எரிமணித்தவி சிற்பொலிந் தென்னவே
விரியும் வெற்றி இலங்கையர் வேந்தன், நீ
டரியணைப் பொலிந் தான், தமர் ஆர்த்தெழ.

கதிர் - சூரியன். எரிமணித்தவிசு - பிரகாசிக்கின்ற இரத்தின ஆசனம். பொலிந்தென்ன - பொலிந்தாலென - விளங்கினாற்போல. விரியும் வெற்றி - மிகுகின்ற வெற்றி(யுடைய). நீடு அரி அணை - பெரிய சிங்காதனம். தமர் - சுற்றத்தார். ஆர்த்து - ஆரவாரஞ்செய்து. எழ - மனம்கிளர (தமிழகராதி) - உற்சாகங்கொள்ள.

'ஆர்த்து எழ' என்பது 'எழுந்து ஆர்க்க' என விகுதிபிரித்துக்கூட்டிப் பொருள்வரையப்பட்டதுகாண்க.

சீதைக்கு அனுமான் சோபனஞ்சொல்லுதல்

பின்பு, இராமன், அனுமானைநோக்கி 'நீ சீதையிடஞ்சென்று இங்கு நிகழ்ந்தசெய்திகளைத் தெரிவிப்பாயாக' என்று பணித்தான். அவன் வணங்கி, விடைபெற்று, சீதையிருந்த அசோகவனத்தை யடைந்து, இராமநாமத்தைப் பலமுறைசொல்லிப் பாடி, ஆனந்தக் கூத்தாடி, இரண்டுகைகளையும் தலைமேல்தூக்கிக் குவித்துக் கொண்டு, சீதையெதிரேநின்று, '(இராமபிரானைப் பிரிந்ததனால், ஆபரணங்களைக் கழற்றியெறிந்து ஓராபரணமுமில்லாத) ஏழை (ப்பெண் போன்றிருக்கின்ற உன)க்குச் சுப சமாசாரம் (—நற் செய்தி சொல்லவந்தேன்) (இனி, இராமனை அடைவதனால்) ஆபர ணங்களணியும் உனக்கு மங்களம் (உண்டாகுக). (நல்வாழ்வு) வாழ்வாயாக. (மேலும்) சோபனம் (உண்டாகுக). மங்களசோப னம் (மேன்மேலும் உண்டாகுக). இராவணனை இராமபிரான் தொலைத்தொழித்தான். (அதற்காக மீண்டும்) சோபனம்(சொல்லு கின்றேன்).* இராவணன் தலைகள் மலைகள்போலவும், உடல் கடல் போலவும் தோள்கள் கடலின் அலைகள்போலவும் கிடக்கின்றன.

---

*ஏழை சோபனம்! ஏந்திழை சோபனம்!
வாழி! சோபனம்! மங்கள சோபனம்
ஆழி யான அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம்!

ஏழை - பெண்; வறுமையுடையாள். சோபனம் - நற்செய்தி. ஏந்துதல் - தரித்தல். இழை - ஆபரணம். ஏந்திழை, அன்மொழித்தொகையாய்த் தரிக்கப்பெற்ற ஆபரணத்தையுடையவளென்ற பொருள் குறித்தது. வாழி, வாழ்க எனப் பொருள்படும் வியங்கோட்சொல். மங்கலமும் சோபனமும், நற்செய்தி யென்ற ஒருபொருள்குறித்த சொற்கள்; சிறந்த நற்செய்தி யென்ற பொருள் குறித்தன. ஆழி ஆன அரக்கன் - (கருங்) கடல்போன்ற (கரிய பெரிய தேகமுடைய) இராக்கதன் - இராவணன். ஆரியச் சூழி யானை - ஆரியனாகிய முகபடாமுடைய யானை - இராமன். சூழி, யானைக்கு விசேடணம். ஆரியன் - பெரியோன்; ஆரியவகுப்பினன். துகைத்தல் - மிதித்துழக்கல். இராமக்களிறு, இராவணக்கடலை மிதித்து உழக்கித் தொலைத்தது என்பது கருத்து. களிறு - ஆண்யானை.

இலங்கையில் (போருக்குப் போகாதவரான பெண்பாலாரொழியப் பிழைத்தவரில்லையென்னும்படி ஆண்பாலார் மிகப் பெரும்பான்மைய ராகக் கொல்லப்பட்டனர்' என்று கூறினன். இராமன் பிரிவாற் ருமை, சிறைவாசம் முதலிய துன்பங்களால், இதற்குமேல் மெலித லியலாதென்னும்படி மெலிந்திருந்த சீதையின் தேகம், அவள் அனுமான்வழங்கிய சோபன அமுதத்தைப் பருகியபோது, ஒற்றைக்கலையுடைய பிறைமதி நாளடைவினின்றித் திடீரென மற் றைக்கலைகள் பதினைந்தும் ஒருங்குற்று நிறைமதியானாற்போலப் பூரிப்படைந்தது. கிரகணகாலத்தில் விழுங்கிய இராகுப்பாம்பு மீள உமிழ்ந்த பூரணசந்திரன்போல (த் துரதிட்டகாலத்தில் பீடித் திருந்த பீடைநீங்கிப்) பொலிந்த சீதை, பெருமகிழ்ச்சியடைந்து, அனுமனைநோக்கி இன்னது சொல்வதென்ற எண்ணமில்லாதவ ளாய், நெடுநேரம் ஒன்றும் உரையாது சும்மாவிருந்தாள். அப் போது, அனுமான், 'யான் நற்செய்தி கூறியதற்கு மறுமாற்ற மொன்றுங் கூருமல் மௌனமாயிருப்பதற்குக் காரணம், மகிழ்ச்சி மிகுதியோ, யான்கூறியது பொய்யாயிருக்குமென்று கருதியதோ?' என்று வினவினன். 'உயர்வொப்பற்ற உவகையினால் திகைப்புற் றுக் கூறத்தக்க மறுமொழி யாதெனப் பலமுறை நினைந்துபார்த்து ஒன்றுமில்லையென்றுணர்ந்து சிந்தை அயர்ந்திருக்கின்றேன். (ஒரு வர்க்குப்) பாக்கியம் (நேர்ந்தால், அது, களிப்புவிளைத்தலோடு) பைத்தியத்தையும் உண்டாக்குமோ?* முன்பு (நீ கடல்கடந்து)

---

*மேக்கு நீங்கிய வெள்ள வுவகையால்
ஏக்கம் உற்றேன் றியம்புவ தியாதென
நோக்கி நோக்கி யரிதென நொந்துளேன்
பாக்கி யம்பெரும் பித்தும் பயக்குமோ?

மேக்கு நீங்கிய - மேலான தில்லாத. வெள்ள உவகை - மிகுதியான மகிழ்ச்சி. ஏக்கம் - திகைப்பு. பயத்தல் - உண்டாக்குதல்.

'பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ' என்றது 'கனித்த வின்கனி கள்ளினிற் காட்டுமோ' (இந்தப்படலம் 23) என்பதையும், 'காதலென் றதுவு மோர் கள்ளின் றோற்றமே' (இந்தப்படலம் 253) என்பதையும் நினைவுகூரச் செய்கின்றது.

வந்தபோது, என்னைநோக்கி, "உன்னைச் சிறைச்சாலையினின்று விடுவிப்பே" னென்று (அபயம்) கூறிய நீ, (சொன்னசொல் தவறாமல் என்னைச் சிறையினின்று) விடுவித்து (என்னைச் சிறைப்படுத்தியவன் கொல்லப்பட்ட) குதூகலசமாசாரத்தையும் கூறினாய். (அப்படிப்பட்ட பேருதவிசெய்த உனக்கு) எப்படிப்பட்ட பிரதியுபகாரம் செய்யத்தக்கதென்று சிந்தித்துப்பார்த்து (அந்தச் சிந்தனையில் ஆழ்ந்திருந்ததனால்) சொல்லவேண்டியதைச் சொல்ல மறந்து கூறாதிருந்தேன்.* (நீ செய்த உயர்வொப்பில்லாத உதவிக்கு எதிருதவியாக உனக்கு) உலகம் மூன்றையும் உதவுதற்கு (உன்னினேன். உன்னி, அவை, உன் உதவிபோல) ஒரு தனி(ச்சிறப்புடைய)மதிப்பிலாமையை மனத்துட் கொண்டேன். மேலும், அவைகள் (உன் உதவிபோல மதித்தற்கில்லாமையோடு) நிலையானவையல்லாமையையும் நினையலானேன். (யான் உனக்கு யாதுசெய்யத்தகுமென்றால்,) உன்னை என் தலையினால் தொழுதலே தகும்.† உனக்கு

---

*முன்னை நீக்குவென் மொய்சிறை யென்றநீ
பின்னை நீக்கி யுவகையும் பேசினை
என்ன பேற்றினை யீகுவ தென்பதை
யுன்னி நோக்கி யுரைமறந் தோவினேன்.

மொய் சிறை - வலிமையான சிறைச்சாலை. பேறு - நன்கொடை. ஓவுதல் - நீங்குதல்.

†உலக மூன்றும் உதவற் கொருதனி
விலையி லாமையும் உன்னினென் மேலவை
நிலையி லாமை நினைந்தனென் நின்னையென்
தலையி னால்தொழ லேதகும் தன்மையோய்.

தன்மை - குணம். 'தன்மையோய்' என்பது, உயர்குணங்களுடையானே யென்று பொருள்கொள்ளநின்றது.

அடியவனான அனுமனுக்கு ஆண்டவனுக்குச் செய்தற்குரிய தலைவணக்கம் தகுமென்பதனினும் அதிகமாகப் புகழ்தல் அசாத்தியமென்பது தெளிவு.

யாதொருகைம்மாறுஞ் செய்தற்கியலாத யான் யாதுசெய்யக் கடவதென்றெண்ணிச் சும்மா (வாய்பேசாது மௌனமாக) இருந்தேன். யான் உன் திறத்தில் செய்யத்தக்கது யாதென்று நீ சொல்வாயாக' என்று கூறினள் சீதை. அநுமான் 'அம்மே! நீ எனக்குத் தரத்தக்க வரம், யான் உன்னை அழைத்துக்கொண்டுபோய் மனுகுலதிலகனான இராமபிரான்சன்னிதியிற் சேர்க்கும்படி அநுமதியளித்தருளுதலே' என்றான்.

சீதையைக் காவல்செய்த அரக்கியரை அநுமான் கொல்வேனெனல்

பின்பு அநுமான், 'எம்பிராட்டியே! உனக்கு இதம்செய்த என் தாய் போன்றவளான திரிசடை தவிர, இந்த இராட்சசிகளெல்லாரையும் எரித்தழிப்பேன். கூறத்தகாத கொடுஞ்சொற்களைக்கூறி விரைந்தோடி மேல்விழுந்து விழுங்குவோமென்று வெருட்டிய இவர்களுடைய உடம்புகளை நகங்களினாற் பிளந்து எமனுக்கு இரையாக்குவே' னென்றான்.

அரக்கியர் சீதையைச் சரணடைய அவள் அபயமளித்தல்

அரக்கியர், 'தாயே! உன் திருவடிகளேசரணம். அவைகளை விடே' மென்று பற்றி அடைக்கலம்புகுந்தார்கள். சீதாதேவி, 'நீங்கள் அஞ்சாதீர்கள்' என்று அபயமளித்து, அநுமானைநோக்கி, 'இவர்கள், இராவணன் இட்ட கட்டளைகளை இயற்றினார்களேயன்றி என்ன தீமையைச் செய்தார்கள்.*]

---

*அன்னை, 'அஞ்சன்மின் அஞ்சன்மின் நீர்' என;
மன்னு மாருதி மாமுகம் நோக்கி,வே
றென்ன தீமை இவரிழைத் தார்? அவன்
சொன்ன சொல்லின தல்லது, தூய்மையோய்.

அஞ்சல்மின் - அஞ்சா திருப்பீராக. என - என்று. இழைத்தார் - செய்தார். தூய்மையோய் - பரிசுத்தமுடையானே.

199 'யானி ழைத்த[1] வினையினி னிவ்விடர்
தான டுத்தது தாயினு மன்பினேய்[2]
கூனி யிற்கோடி யாரல ரேயிவர்
போன வப்போருள் போற்றலை புந்தியோய்'.

கொண்டுகூட்டு: 'தாயினும் அன்பினேய்! புந்தியோய்! யான் இழைத்த வினையினின் இவ் இடர்தான் அடுத்தது; இவர் கூனியிற் கொடியாரலரே? போன அப்பொருள் போற்றலை.'

பொருள்: 'தாயின் அன்பினும் அதிகமான அன்புடையானே! (சிறந்த) அறிவுடையானே! யான் செய்த தீவினைப்பயனாக எனக்கு இந்தத்துன்பம் நேர்ந்தது. (இதற்காக இவர்களைக் கோபித்தல் நியாயமன்று.) இவர்கள் (எல்லாத்துன்பங்களுக்கும் மூலகாரணியான) கூனியினுங் கொடியாரல்லரே? (அவளை இராமபிரான் தண்டியாதிருக்க, இவர்களை நீ தண்டிக்கலாமோ? இவர்கள் சொன்ன கடுஞ்சொற்களும் செய்த கொடுஞ்செயல்களுமான) கழிந்துபோன காரியங்களைக் கருதாது (மறந்து) விடுவாயாக'.

இழைத்த - செய்த. இடர் - துன்பம். போன - கழிந்தொழிந்த. பொருள் - காரியம் (தமிழகராதி). போற்றுதல் - கருதுதல் 'பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின்' குறள், 537 (தமிழகராதி). புந்தி - அறிவு.

'வினைப்பயன் தவருதாதலின், யான் செய்த தீவினையால் எனக்கு இத் தகைய இடர் நேர்ந்தது; இதன்பொருட்டுப் பிறர்மேற் கோபிக்கக் காரண மில்லையென்பது, முதல்வாக்கியத்தின் தாற்பரியம். நீ இத்தன்மையை அறியாயல்லை. ஆயினும், என்னிடத்து மிக்க அன்பினால் இவ்வாறு சீற்றங் கொள்கின்றனையென்பதுபடத் 'தாயினுமன்பினேய்' என்றும், 'புந்தியோய்' என்றும் விளித்தாள். "நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்றபடி இவர்கள் சொல்லையும் செயலையும் பொருள்செய்யாதுவிடுதலே தகுதியென் பது, "போனவப்பொருள் போற்றலை" என்பதன் கருத்து. பெருந்தீங்குகட் கெல்லாம் நாற்றங்காலாய்நின்ற கொடிய கூனியிடத்தும் சிறிதும் சீற்றங் கொள்ளாத இராமபிரானது பெருந்தகைமையை நீ அறிவாயன்றே; அங் ஙனம் இருக்க, எளிய இவர்கள் திறத்திற் சீற்றங்கொள்ளலாமோ வென்பாள், 'கூனியிற்கொடியாரலரேயிவர்' என்றாள். மூன்றாமடிக்கு இவர்கள் (நீ

சொல்லுகிறபடி கொடியவர்களென்றே கொண்டாலும்) கூனியைக்காட்டிலும் கொடியவர்களல்லரே என்று பொருள்கொள்ளினுமாம்; மிகக் கொடிய அக் கூனிவிஷயத்தில் இராமன் ஏதேனும் தண்டனைசெய்யக் கண்டதுண்டோவென்பது, இதன் உட்கோள். தான் இராமனை மாயமானின் பின்னே வலியச்செலுத்தியதும், பின்பு அவன்பின்னே இலக்குமணனையும் வலியத்துரத்தியதுமாகிய தீயவினையின்பயனாக இராவணன் தன்னைக் கவர்ந்து சிறைவைத்தலாகிய தீங்கு நேர்ந்தமைபற்றி, 'யானிழைத்த வினையினி னிவ்விடர்தானடுத்தது' என்றன ளென்னலாம். 'பகவதபசாரத்தினும் பாகவதாபசாரம் கொடியது; அது உடனே தவறாது பெருந்தீங்கு விளைக்கும்' என்கிற தத்துவப்பொருளுக்குத் திருஷ்டாந்தமாக, சீதை இலக்குமணனைக் கடிந்து வெருட்டியவுடனே அவட்குச் சிறையிருப்பாகிய கொடிய தண்டனை நேர்ந்ததென்பர், உணர்ந்தோர்' வை. மு. கோ.

'(பொறுமையும் கருணையும் மேலிட்ட) இந்த மனநிலையில் அந்தத் தாயுள்ளம் ராவணனைக்கூட மன்னிக்கத்துணிந்ததுபோலக் காண்கிறது. "எய்தவன் இருக்க அம்பைநோவதிற் பயனில்லை." என்று ராட்சஸிகளை மன்னிக்கத்துணிந்தவள், 'எய்தவன்' இராவணன், என்றுகூட இப்போது ஒப்புக்கொள்ளவில்லை. தன்னுடைய வினைப்பயன்தான் தன்னை இடர்ப்படுத்தியதென்கிறாள். அப்படிப்பேசிக்கொண்டிருக்கும்போதே, பழைய ஞாபகங்கள் வருகின்றன. "எல்லாத் துன்பங்களுக்கும் ஒருவிதை கூனியின் சூழ்ச்சிதானே? அந்தக் கூனியைக்காட்டிலும் கொடியவர்களல்லரே இவர்கள்!" என்று சொல்லி, அவளையும் மன்னித்துவிட்டதுபோல், "நீ புத்திமான்; கடந்துபோன காரியத்தை மனதில்வைத்துக்கொள்ளவேண்டாம்; மறந்துவிடு!" என்கிறாள். பேச்சினிடையே அனுமானைத் "தாயினும் அன்பினோய்!" என்று பாராட்டி அழைப்பதைக் கவனியுங்கள். "இவ்வளவு விஷயமும் உனக்குத்தெரியும். ஆயினும் என்னிடத்திலுள்ள அன்புமிகுதியால்தானே எல்லாவற்றையும் மறந்துவிட்டாய்? அந்த அன்பில் கொஞ்சமாவது இவர்கள்மீதும் செல்லலாகாதா?" என்பது குறிப்பு.' பி. ஸ்ரீ. கம்பசித்திரம்.

பாடபேதம்: [1] அடுத்த. [2] அடுத்துள வாயினுந் தன்மையாற்.

[தீவினைக்கு இருப்பிடமான, அறிவற்ற, இந்த இராட்சசிகளின்மனத்துக்கு வருத்தஞ்செய்யாதிருப்பாயாக (என்று வேண்டு

கின்றேன்.) இந்த வரத்தை எனக்குத் தந்தருள்வாயாக' என்று சீதை கூறினாள்.* அனுமான் 'உன் திருவருளின்படியேயாக' என்று கூறினான்.

விபீடணன், சீதையை இராமனிடம் வரும்படி வேண்டல்

'இராமன், 'விபீடணா! நீபோய்ச் சீதையை அலங்காரஞ்செய்வித்துக் கூட்டிக்கொண்டு வருவாயாக' என்று பணித்தான். விபீடணன், தன் கருமேனி காரிருளையும் இரத்தினகிரீடம் இளவெயிலையும் ஆபரணங்கள் மின்னலையும் வீசாநிற்கச் சென்று, சீதையின் செம்பொற்பாதங்களைச் சேவித்துத் 'தலைவியே! சத்துருசயம் நிறைவேறியிட்டது. இராமபிரான் உன்னைப் பார்க்கவிரும்புகின்றான். தேவர்களும் உன்னைத் தெரிசிக்கவந்திருக்கின்றார்கள். உன்னை அழைத்துக்கொண்டுவரும்படி இராமபிரான் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றான். நீ மனத்துயரத்தைநீக்கி, அணியத்தக்க ஆபரணங்களை அணிந்துகொண்டுவருவாயாக' என்றான். சீதை, 'யான் இங்கேயிருந்த நிலைமையை இராமபிரானும் தேவரும் முனிவரும் தேவர்மாதரும் முனிவர்பன்னியரும் காண்பது நல்லது'

---

* 'எனக்கு நீஅருள் இவ்வரம், தீவினை
தனக்கு வாழ்விட மாய சழக்கியர்
மனக்கு நோய் செயல்' என்றனள், மாமதி
தனக்கு மாமறுத் தந்த முகத்தினள்.

சழக்கு - அறியாமை. மனக்கு - மனத்துக்கு. நோய் செயல் - வருத்தஞ்செய்யாதிருப்பாயாக.

'சந்திரனுக்கு இயல்பாகவுள்ள களங்கத்தை, சீதையின்முகத்துக்கு அது தான் ஒப்பாகமாட்டாமையால் அடைந்த அவமானத்தின் குறியாகக் கற்பித்து, ''மாமதிதனக்கு மாமறுத்தந்த முகத்தினள்'' என்றார் தற்குறிப்பேற்றவணி.................................இராவணவதத்தையும் இராமவிஜயத்தையும் அனுமான் சொல்லக்கேட்டதனாலாகிய ஆனந்தத்தாற் பிராட்டியின் திருமுகத்தில் தோன்றிய புதுமலர்ச்சி இதில் விளங்கும்.' வை. மு. கோ.

என்று கூறினள். அவன், 'உன்னை அணியணியும்படிவேண்டினது என்கற்பனையன்று, இராமபிரான்கட்டளை'யென, 'அப்படியேசெய் வே'னென்று கூறினள்.

தேவமாதர் சீதையை அலங்கரித்தல்

திலோத்தமை முதலிய தேவமாதர்கள் சீதையை நீராட்டுதற் குரிய கத்தூரி புழுகு கலந்த சந்தனக்குழம்புகொண்டு அவளை அணுகினார்கள்.]

200 காணியைப் பெண்மைக்[1] கெல்லாம் கற்பினுக்
கணியைப்[2] பொற்பின்[3]
ஆணியை யமிழ்தின் வந்த வமிழ்தினை[4]
யறத்தின் றாயைச்
சேணுயர் மறையை[5] யெல்லா முறைசெய்த[6]
செல்வ னென்ன[7]
வேணியை யரம்பை[8] மெல்ல வான்முறை
சுகிர்த்து விட்டாள்.[9]

கொண்டுகூட்டு: பெண்மைக்கெல்லாம் காணியை, கற்பினுக்கு அணியை, பொற்பின் ஆணியை, அமிழ்தின்வந்த அமிழ்தினை, அறத்தின் தாயை, வேணியை, சேணுயர் மறையையெல்லாம் முறைசெய்த செல்வனென்ன, அரம்பை, மெல்ல வான்முறை சுகிர்த்துவிட்டாள்.

பொருள்: பெண்பாலார்க்குரிய நலங்களுக்கெல்லாம் (இருப்பிடமாயிருப்பதினும் சிறப்பான வளரிடமான) விளைநிலமானவளும், பதிவிரதாதருமத்துக்கு (அதனை அழகுறச்செய்யும்) ஆபரணமானவளும், அழகென்ற பொன்வகையிலே (உயர்மாற்றுப்பொன்னான) ஆணிப்பொன்னானவளும், தேவாமிர்தத்தோடுதோன்றிய திவ்வியாமிர்தமானவளும், தருமத்தின் தாயானவளுமாகிய சீதையின் தலைமயிர் (அவள் சிறையிலிருந்தகாலத்திற் பேணப்படாதிருந்ததனால்) சடையாயிருந்ததை, (ஒழுங்குகுலைந்து குழம்பியிருந்த) வேதத்தை (வகைப்படுத்தி) ஒழுங்குபடச்செய்த வேதவியாசமாமுனிபோல, அரம்பை, மெல்லமெல்ல (உரோமங்கள் சிதையாதபடி சிக்கெடுத்து வாரிச் சீவிச் சிறைவாசத்துக்குமுன்னிருந்தபடி) ஒழுங்குபட வகிர்ந்துவிட்டாள்.

காணி - நிலம். பெண்மை - பெண்மைக்குணங்கள் - பெண்ணுக்குரிய நலங்கள். அணி - ஆபரணம். பொற்பு - அழகு. ஆணி, உரையாணியைக்குறித்து, உரையாணிப்பொன்னை உணர்த்தியது. அமிழ்தின்வந்த - அமிழ்துடன் பிறந்த. இன்னுருபு, ஒடுப்பொருளில்வந்தது. சேண்-உயர்ச்சி. சேண் உயர் - மிகவுயர்ந்த. மறை - வேதம். செல்வன், வேதவியாசமுனியைக்குறித்தது. வேணி - சடை. வரன்முறை, கூந்தல் சடையாகுமுன்னிருந்துவந்த ஒழுங்கை உணர்த்திநின்றது. சுகிர்தல் - வகிர்தல். (தமிழகராதி.)

சிறைவாசகாலத்தில் சீதையின்கூந்தல் பேணப்படாமையால் சடையானதைச் சுந்தரகாண்டம் காட்சிப்படலத்தில் 'குமையு றத்திரண் டொரு சடை யாகிய் குழலாள்' எனக் கூறப்பட்டிருப்பது காண்க. 'இராமனுடைய கையைப்பிடித்தான்' என்பது, 'இராமனைக் கையைப்பிடித்தான்' என வரல்போலத் தாயினுடைய வேணியைச் சுகிர்த்துவிட்டாள்' என்பது, 'தாயை வேணியைச் சுகிர்த்துவிட்டாள்' என வந்தது.

'அயோநிஜை (யோனிவழியாற் பிறவாதவள்) ஆன பிராட்டியின் வேணிக்கு அபௌருஷேயமான (ஒருவராற் செய்யப்படாத) வேதம் உவமைகூறப்பட்டது.................கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என முறையே வருகிற நால்வகையுகங்களுள் திரேதாயுகத்தில் நடந்ததான இராமசரித்திரத்தில் பிராட்டியின்கூந்தலை அரம்பை செம்மை செய்தற்குத் துவாபரயுகத்தில் வியாசர் வேதத்தை வகுத்தல் உவமைகூறத் தகுமோ? எனின்,–காரணம் காரியத்துக்கு முந்தியதாதல்வேண்டுமென்ற நியதிபோல உவமானம் உவமேயத்துக்கு முந்தியதாதல்வேண்டுமென்ற நியதியில்லாமையால், கவி தான் அறிந்ததும் லோகப்பிரசித்தமுமான எதையும் உவமைகூறத் தகுமென்க.' வை. மு. கோ.

பாடபேதம்: [1] பெண்ணுக்கு. [2] இடைந்த, அமைந்த. [3] பொற்பார். [4] அழகினை. [5] முறையை. [6] உரைசெய்த. [7] செல்வனன்ன, செய்கையென்ன. [8] வகிர்ந்து, சுகிர்ந்து. [9] வரன்முறைத்திறத்து. வரன்முறை சுருக்கு..., வரன்முறை சுருக்கவிட்டார்; விரன்முறை சுகிர்த்து.

[தேவமாதர், சீதைக்குப் பல்விளக்கி நீராட்டி ஈரம்புலர்த்திக் கலவைச்சாந்தணிந்து பட்டாடை யுடுத்தி ஆபரணங்களை அணிந்து தாம்பூலந்தரிப்பித்து மந்திரோச்சாரணத்தோடு ஆலத்திநீரை வலமாகச்சுழற்றிக் காப்புச்செய்தார்கள்.

விபீடணன் சீதையை விமானத்திலேற்றிக்கொண்டுபோய் இராமன்சன்னிதியிற் சேர்த்தல்

விபீடணன் சீதையை விமானத்திலேறச்செய்து, தேவமாதர் சூழ்ந்துவர, அவர்களை வானரரும் அவர்களை அரக்கரும் சூழ, விமானத்தைச்செலுத்தி, இராமனிடம் சென்றான். இராமன் 'பச்சிலைவண்ணமும் பவளவாயுமாய்க் கைச்சிலையேந்திநின்றதனைக் கண்டனள்' சீதை. நீங்கியிருந்த உயிர் திரும்பிவந்துசேரப்பெற்ற உடல்போல, இராமன் காட்சியையிழந்திருந்த சீதைமுகம் அந்தக் காட்சியைத் திரும்பப்பெற்றுப் பொலிந்தது. சீதை விமானத்தினின்றும் இறங்கி, எல்லாச் சீவான்மாக்களுக்கும் எப்பிறப்பினும் பிறப்பொழிந்த முத்தியினும் துணைவனுயிருக்கும் பரமாத்துமாவான இராமனைத் தொழுதாள். தொழுதவள், 'என் நாயகனைக் காணப்பெறாமலே இறந்திடுவேனோவென் றேங்கியிருந்தேன். இப்போது காணப்பெற்றேன். இனி எத்தீங்கெய்தினும் இடர்ப்படேன்' என்று நினைந்து, முன்கொண்டிருந்த ஏக்கம் நீங்கினாள். கற்புக்கு அரசியானவளும், பெண்மைக்குணங்களுக்குப் பாதுகாவலானவளும், அழகுக்கழகானவளும், புகழுக்கு இருப்பிடமானவளும், (வெள்ளத்தில் அகப்பட்ட பிள்ளையை மீட்டற்குத் தானும் அவ்வெள்ளத்தில்விழும் தாய்போல, இராவணன்சிறையிலகப்பட்ட தேவமாதரை மீட்கத் தானும்) சிறைக்குள்ளாகியருளிய தருமதேவதைபோன்றவளுமான சீதையை இராமன் செவ்வையாகப் பார்த்தான்.

இராமன் சீதையின் கற்புறுதியை மெய்ப்பிக்கக் கடிந்துகூறல்

ஆனந்தக்கண்ணீர் பெருகத் தன்னை அடிபணிந்துநின்ற சீதையை, இராமன் பாம்புசீறுதல்போலச் சீறிப்பார்த்து, 'நீதிநெறிதவறிய இராவணனுடைய இலங்கையூரில் நெடுங்காலம் வாழ்ந்தாய்; அவன்கீழ் அடங்கியிருந்தாய்; அவன் அளித்த அறுசுவையுணவுவகைகளை அருந்தினாய்; ஒழுக்கம் ஒழிந்தும் உயிரொழிந்தாயில்லை. அச்சமின்றி இங்குவந்தது யாதுகருதி? உன்னை விரும்புவேனென்று எண்ணினையோ? மலைகளைக்கொண்டு கடலையடைத்து,

ஆயுததாரிகளான அரக்கரை அடியோட்டழித்து, இராவணனை வென்றது, உன்னைச் சிறையினின்று மீட்டும்பொருட்டன்று; மனையாளை மாற்றான் கவர்ந்துகொள்ள, மாறுசெய்யமாட்டாதவனென்ற வன்பழியினின்று என்புகழை மீட்டும்பொருட்டென் றறிவாயாக. உயர்ந்தகுலத்திற் பிறந்தாளுக்குரிய ஒழுக்கமுடையாயல்லை. தாழ்ந்தநிலத்திற் *புழுப்போலப்பிறந்த நீ புழுவொத்த இழிவுற்றவளாயிருக்கின்றாய். தீயொழுக்கமுடைய நீயொருத்திதோன்றியதனால், வீரமுதலிய பல நற்குணங்களுடைய அரசன்புகழ், ஈகையின்மையால் அழிதல்போல, (பெண்களுக்குரிய) பெண்மையும் பெருந்தன்மையும் உயர்குடிப்பிறப்பும் உறுதியான கற்பும் நல்லொழுக்கமும் தெளிவான அறிவும் புகழும் உண்மையும் அழிந்தன.† குலப்பெண்கள் கணவரைப் பிரிந்தால், பொறிகளைப் புலன்களின்வழியேசெல்லாமல் அடக்கிவைப்பர்; (கூந்தல், சீவி வாரிப் பேணுமையால் சிக்குண்டு கற்றையாகிய) சடையுடையவராவர்; (கற்பாகிய) பெருந்தவமுடையராய் (ஐம்பொறியடக்கிச் சடைமுடிதரித்துத் தவஞ்செய்யும் முனிவரையொத்து) இருப்பர்! ஏதாயினும் பழிநேர்ந்தால், உயிரைவிட்டு அப்பழியைப் போக்குவர்.

---

* இங்கே, சனகராசன் யாகபூமியை உழுவித்தபோது, உழுபடைச் சாலில் உதயமானவள் சீதையென்பது சிந்திக்கத்தக்கது.

†பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பெனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
உண்மையும், நீயென ஒருத்தி தோன்றலால்,
வண்மையில் மன்னவன் புகழின் மாய்ந்தவால்.

பெண்மை - பெண்மைக்குணங்கள் - பெண்ணுக்குரிய நலங்கள். பெருமை - பெருந்தன்மை. மேம்பாடு. பிறப்பு, உயர்குடிப்பிறப்பையும், ஒழுக்கம், உயர்குலவொழுக்கத்தையும் குறித்தன. கற்பெனும் திண்மை - கற்பென்னுங் கலங்காநிலைமை (குறள் உரை). சீர்மை - சீர் - புகழ். வண்மை - ஈகை.

‘உண்மை - மன மொழி மெய்கள் மாறுபடாமை; அகமாகிய மனத்தின் கருத்தும் புறமாகிய சொற் செயல்களும் தம்மில் மாறுபாடின்றியிருத்தல்.’ வை. மு. கோ.

(இப்படிப்பட்ட குலமாதர்க்குரிய குணங்கள் உன்னிடமில்லை). பல கூறுவானேன். உன் தீயொழுக்கம், என்மனத்தை அறுக்கின்றது. செத்தொழிவாயாக, அல்லது எங்கேனும் சென்று தொலைவாயாக' என்றான்.* அந்தக் கடுஞ்சொற்களைக்கேட்டதேவர் முனிவர் அரக்கர் வானரரனைவரும் மனங்கலங்கி வாய்விட்டுக் கதறினார்கள்.

சீதை கூறல்

(வெட்கத்தால்) தரையைநோக்கித் தலைகவிழ்ந்துநின்ற சீதை, புண்ணைக் கோல்கொண்டு கிளறினாற்போன்ற துன்பத்தால் பிரக்கினையற்றுப் பெருமூச்சுவிட்டாள். இழந்தஉணர்வைத் திரும்பப் பெற்றபோது, அவள், உலகத்தோரை முன்னிலையாக்கி, '(என் நாயகனைப் பிரிந்தபோதே உயிரை விட்டுவிடாமல், அவனை அடையலாமென்ற நம்பிக்கையால் இதுவரையும்) உயிரோடிருந்து (பதிவிரதமாகிய தவத்தைச் செய்து) யான் பெற்றபேறு (அவனைக் கண்டு தொழப்பெற்ற) இவ்வளவினதேபோலும். தவப்பேற்றுக்கு மாறாக அவப்பேறு நேரலாயினது' என்றுகூறி, (இராமனை நோக்கிக்) கூறுகின்றாள்.† 'இங்கே, இலங்கையிலே, யான் சிறையிருந்த

---

* 'அதிபரிசுத்தையும் மாபதிவிரதையுமான பிராட்டியைநோக்கிப் பெருமாள் இங்ஙனம் நிர்த்தாக்ஷிண்யமாகச்சொன்னது, அவளுடைய கற்பின் நிலைமையை யாவரும் கண்டு உணரும்படிசெய்யவேண்டுமென்னுங் கருத்தினாலேயேயென்றும், அவளிடம் தூய்மையில்லாமையினாலாவது அவளுடைய தூய்மையைத் தான் அறியாமையாலாவது அன்று என்றும் அறிக. இவ்வுண்மை மேல் விளங்கும். வை. மு. கோ.

† இற்றது போலும் யான் இருந்து பெற்றபே
றுற்றதால் இன்றவம்' என்றென் றோதுவாள்

இற்று - இத்தன்மைத்து. அது, பகுதிப்பொருள்விகுதி. அவம் - கேடு. 'இன்று அவம் உற்றது' என இயைத்திடுக. ஆல், அசை. என்றென்று - என்று (முன்னிலைப்படுத்திய உலகத்தோருக்குக்) கூறி. ஓதுவாள் - (இராமனுக்குப் பின்வருவதைச்) சொல்லுவாள்.

அசோகவனத்துக்கு அனுமான் வந்து தான் உன் தூதனென்று கூறி, நீ பகைவனை வென்று என்னை மீட்டற்கு இங்கே எழுந்தருள்வாயென்றுசொன்னான். (என்னைச் சாவாமற்காத்த அந்தப்) பெரியோன் (யான் தற்கொலைசெய்தற்கெத்தனிக்குமளவு) சோர்ந்திருந்த நிலைமையை உனக்குச் சொல்லவில்லையோ? அவன் உண்மையான தூதனல்லனோ? நான் இவ்வளவுகாலம் வருந்திப் பாதுகாத்த எவ்வளவோ சிறந்த தவமும்* நற்குண நற்செய்கைகளும் பதிவிரதாதருமமும் உன் திருவுள்ளம் தெரிந்திடாததனால் பைத்தியச்செயல்களாய்ப் பாழாய்ப் பயனற்றவையாயின. பங்கயாசனனான் பிரமதேவனும் இடபாரூடனான சிவபெருமானும் சங்கமேந்தியாகிய திருமாலும், எல்லாப்பொருள்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகத் தெரிவாராயினும், 'மங்கையர் மனநிலை உணரவல்லவரோ?' † என் குற்றமற்ற கற்புநெறியை (நீ தெரிந்தாயில்லை. நீ தெரியாதபோது, அதனை) வேறு யாருக்குச் சொல்லியுணர்த்தக்கடவேன்; இப்போது எனக்கு இறப்பினும் சிறப்புடையது, யாதுமில்லை. 'இறப்பாயாக' என்று நீ கட்டளையிட்டது தக்கதே. அது எனது கடமையாகவுமிருக்கிறது.' என்று கூறி, இலக்குமணனை அழைத்து, 'அக்கினியை அமைப்பாயாக' என, அவன், இராமன்கருத்தறியும்படி வணங்க, அவன் கண் பார்வையால் தன் அனுமதியைத் தெரிவித்தான்.

---

* இங்குத் தவமென்றது-ஊணுறக்கமின்றித் தன்னுடம்பை ஒறுத்துத் துன்பங்களைப் பொறுத்து ஐம்பொறியடக்கி மனத்தை யொருவழிப்படுத்திக் கற்புடையளான தனக்குத் தெய்வமும் அனைத்துயிர்க்குந் தெய்வமுமான இராமபிரானையே தியானித்திருத்தல்'. வை. மு. கோ.

† பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ ?

சீதை தீக்குளித்தல்

இலக்குமணன், ஏங்கி விம்மிக் கண்ணீர்பெருக, உயிர்போன வன்போன்று, சாத்திரவிதிப்படி அக்கினியைச் சமைத்தான். சீதை, அதனருகேசென்றாள். லோகமாதாவான அவள் அக்கினிப் பிரவேசஞ்செய்யப்போவதைச் சகிக்கமாட்டாமையால், எல்லா வுயிர்களோடு வேதபுருடனும் தருமதேவதையும் வாய்திறந்து கதறினர். சீதை தீயிற்பாய்தற்குச் சித்தமாய் அதனை வலம்வர லுற்ற அளவிலே, எல்லாவுயிர்களும் நிலைகுலைந்து, சுழன்று, இராமனைநோக்கி அபயமிட்டு அலறி, 'இந்தத் தனியாக்கோபம் தக்க தன்'றென்று சாற்றின. தேவேந்திரனுடைய தேவியர் முதலிய தேவமாதர் அந்தரத்திலே நின்று அலறியழுது '(இந்தக் கண்ணா ராவியான காட்சியைக் காணும்படியான பாபத்தைச்செய்தீர்களே' யென்று கோபித்துத் தாக்குவார்போன்று) தம் கண்களைக் கைக ளால் மோதிக்கொண்டு துடித்தார்கள்.* சீதை இராமனைவணங்கித் தீயைநோக்கி, 'அக்கினிபகவானே! நான் மனம்மொழிமெய் என்ற திரிகரணங்களில் எதனுலேனும் களங்கமுடையேனுயின், என்னை யெரித்திடுவாயாக' என்று கூறினாள்.† (செந்தாமரைமலரில் வாசஞ்

---

* செந்தளிர்க் கைளாற் சேய ரிப்பெரும்
சுந்தரக் கண்களை எற்றித் துள்ளினர்.

சே அரி பெரும் - சிவந்த ரேகைகளையுடைய பெரிய. எற்றுதல் - அறைதல். துள்ளல் - துடித்தல்.

† 'மனத்தினுல் வாக்கினுல் மறுவுற் றேனெனில்
சினத்தினுற் சுடுதியால், தீச்செல்வா' வென்றாள்
வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினாள்.

'மனத்தினுல் வாக்கினு' லென்பதோடு 'மெய்யினுல்' என்பது உபலக் கணத்தாற் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

செய்யும் சீதேவியின் அமிசமான) சீதாதேவி (தன் இருப்பிடமான செந்தாமரைமலர்க்கோயிலுக்குள்ளே செல்வாள்போல,) அக்கினிப் பிரவேசஞ்செய்தாள். அந்த அக்கினி அவள் கற்புத்தீயினால் பஞ்சு போல எரிந்திட்டது.

அக்கினிதேவன், சீதையின் கற்புத்தீச்சுடு தாங்கமாட்டாமல் இராமனைநோக்கி அபயமிடல்

அக்கினிதேவன் தன்னிலழுந்திய சீதையைக் கைகளிலேந்தி, அவள் கற்பின்வெப்பைத் தாங்கமாட்டாதவனாய், இராமனைநோக்கி, அபயமிட்டு அலறினான். தன்னை இராமன் கோபித்ததாலுண்டாகிய தாபத்தினால் சீதையின் மேனியில் அரும்பிய வேர்வைத் துளிகள் உலரவில்லை. (இந்தநிகழ்ச்சி சீதையின் கற்பின் உண்மையைச் சிறப்பாகநிரூபித்ததென உணர்த்துவதன்றி, வேறு) உணர்த்துமாறுண்டோ? (என்னில், கூறுகின்றேன்; அது,) அவள் அணிந்திருந்த மலர்மாலைகள், அவைகளில் (மொய்த்து) ரீங்காரஞ் செய்கின்ற வண்டுகளோடும் துளிக்கின்ற தேனோடும் தண்ணீரிலே தோய்த்தவைபோன்று, (நெருப்பிலுற்ற அடையாளம் ஒரு சிறிது மின்றிக் குளிர்ந்து) காணப்பட்டன (என்பது.)*

---

*ஊடின சீற்றத்தால் உதித்த வேர்களும்
வாடின வில்லையால்; உணர்த்து மாறுண்டோ?
பாடின வண்டொடும் பனித்த தேனொடும்
சூடின மலர்கள்நீர் தோய்த்த போன்றவால்.

ஊடின சீற்றம் - (இராமனுடைய உண்மைச் சீற்றமல்லாத) ஊடற் காலச் சீற்றம் போன்ற (தோற்றச்) சீற்றம். வேர்கள் - வேர்வை (த் துளி) கள். ஆறு - விதம். பனித்தல் - துளித்தல்.

'இீழ், இராமன் சீதையினிடங்காட்டிய கோபம் அவளது கற்புநிலையை உலகம் அறியச் செய்விக்கவேண்டுமென்னுங்கருத்தினால் அன்புபற்றி நிகழ்ந்ததென்பதுதோன்ற, "ஊடினசீற்றம்" எனப்பட்டது. இனி "ஊடினசீற்றத்தால்" என்பதற்கு (பிராட்டி பெருமாளிடம்) கொண்ட கோபத்தாலென்று உரைப்பாருமுளர்' வை. மு. கோ.

சீதை தீயினின்று வெளிப்பட்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

சீதை தீப்பாய்ந்தபோது நிலைகுலைந்த உலகங்கள், திரமாக நின்றன; அஞ்சித் துக்கித்த உயிர்கள் அச்சமொழிந்து ஆனந்த மடைந்தன. அருந்ததி முதலிய கற்புடையமாதர்கள் (களிப்பு மிகுதியால்) நாணத்தையும் அடக்கத்தையும் நழுவவிட்டு நர்த்தனஞ்செய்தார்கள்.

அக்கினிதேவன், இராமனைநோக்கி, 'சீதாதேவியின் தெய்வக் கற்புத்தீயினால் என்னைச் சுட்டு என்வலியையொழித்தாய். மறந்தும் பிழைசெய்யாத (நிரபராதியான) என்னைக் கோபித்தாய் போலும்' என்றுகூறி முறையிட்டான்.

இராமன், 'நீ யார்? நெருப்பினுள்ளேயிருந்து வெளிப்பட்டுத் தோன்றிய நீ கூறியதன் பொருள் யாது? தீயொழுக்கமுள்ள ஒருத்தியை, யாருடைய சொற்படி எரித்திடாமற் பாதுகாத்தாய்? சொல்வாயாக' என்றான். 'யான் அக்கினிதேவன் இந்தத்தாயின் கற்பென்ற கடுமையான தீச் சுடப் பொறுக்கமாட்டாமல் இங்கே (உன் எதிரே) வந்தேன். (அவள் தெய்வக்கற்புத்தீயினால் என் உடம்பு வெந்திருக்கும்) தன்மையை நீ (கண்ணாரக்) கண்டபின்பும் உலகத்தார் எல்லாரு(டைய எண்ணம் சொல் செயலெல்லாவற்று)க்கும் சாட்சியா(ய் எல்லாம் அறிந்தவனா)ன நீ (இவள்கற்பு என்னைச் சுட்டதென்ற உண்மையை வாயினாற் சந்தேகிப்பதாகச் சொல்வதுபோல, மனத்தினாலும்) சந்தேகிக்கின்றாயா?* அக்கினி

---

* 'அங்கியா னென்னையிவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணெந் தேனுறு மியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ !? எவர்க்குஞ் சான்றுளாய்'

அங்கி - அக்கினி. இயற்கை - தன்மை. சங்கித்தல் - சந்தேகித்தல். எவர்க்கும் சான்றுளாய் - எல்லாருக்கும் (அவர்கள் மனம் மொழி மெய்களாற் செய்வன எல்லாவற்றுக்கும்) சாட்சியாக உள்ளவனே - சர்வசாட்சியே. சர்வசாட்சி - கடவுள் (தமிழகராதி).

யைச் சாட்சியாகக்கொண்டு விவாகம் முதலிய காரியங்கள் நிகழ்தலும் சந்தேகங்கள் தெளியப்படுதலும் வேண்டுமென்று வேதங்கள் விதித்திருக்கின்றன. சீதாதேவியின் கற்புறுதியைப்பற்றிக் கூறிய சத்தியவானுன அனுமானுடைய வார்த்தைகளைக் கடைப்பிடியாத நீ, சந்தேகிக்கப்பட்ட பொருள்களின் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக்காட்டும் என்கட்டுரையைக்கேட்டு அந்தத்தேவியைத் திரும்பச்சேர்த்துக்கொள்வாயோ? தேவரும், மூவரும், மூன்றுலகத்தினும் நிற்பன திரிவனவான எல்லாவுயிர்களும், துக்கித்துக் கண்களைக் கைகளால் அறைந்துகொண்டு ஆ! என்று அலறுவதைக் கேட்கின்றாயில்லை. குணமான தருமக்கொள்கையைக் கைவிட்டு அதற்கு மாறாகக் குற்றமான அதருமக்கொள்கையை எங்கிருந்து கொண்டாயோ? மகா பதிவிரதையான இந்தத் தேவி சீறினல், மேகம் மழைபொழியாது; பூமி, (உயிர்களை விழுங்குதற்கு வாய்) பிளந்திடுவதல்லாமல் (அவ்வுயிர்கள் சுகமாக வாழும்படி) சுமந்துகொண்டிருக்காது; இவள் கோபங்கொண்டு சாபங்கொடுப்பாளானல், தாமரைமலர்மேல்வாழும் பிரமதேவனும் இறந்திடுவான்' என்றுகூறி, தீக்குளித்த சீதாதேவி தீங்குற்றில ளென்றுதெரிந்த தேவர் முதலியோர் ஆரவாரித்து உற்சாகங் கொள்ளாநிற்க, அக்கினிதேவன், அவளை இராமன்பக்கத்திலே கொண்டுவந்துசேர்த்தான்.

இராமன் சீதையை ஏற்றுக்கொள்ளல்

'சர்வலோகத்தாருக்கும் தவறாத சாட்சியாயிருக்கின்ற நீ, இவள் யாதொருகுற்றமுமில்லாதவ ளென்று நிராகரிக்கக்கூடாது உன்வாக்கினுற் கூறினையாதலால், இவளிடத்து எப்பழியுமே யில்லை யென்ற உண்மை தெளிவாயிற்று. இவள் நீக்கத்தக்கவளல்லள்; ஏற்கத்தக்கவளே' என்று கருணைநிறைந்த கருத்தினனான இராமன் கூறினன்.

[தொடரும்.]

உ

மதிப்புரை

இனஞ்சேப்பல்:—இது, ஸ்ரீ D. T. தாத்தாசார்யசிரோமணி M. O. L. அவர்களால் எழுதப்பட்டுத் திருப்பதி ஸ்ரீ. வேங்கடேசுவர கீழ்த்திசைக்கலைக்கழகப்பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இதில் 'எடுத்தமொழி யினஞ்செப்பலு முரித்தே' என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரக் கிளவியாக்கச் சூத்திரத்துக்கு உரையாசிரியருரையை வரைந்து, பின் அது பொருந்தாதென்றுகாட்டிய சேனுவரையருரையை வரைந்து, பின்னர் அதுவும் பொருந்தாதென்றுகாட்டிய தெய்வச்சிலையாருரையையும் வரைந்து அதன்மேல் அதுவும் பொருந்தாதென்பதுதோன்ற ஸ்ரீ தாத்தாசாரியரவர்கள் தமதாராய்ச்சியாற் கண்டறிந்த புதியவுரையை வரைந்துள்ளார்கள். உரையாசிரியர்கள் ஓரோர் கருத்துக்கொண்டு உரைவேறுபடக் கூறுதலும் ஒரோவழி மயக்கத்தால் உரை வேறுபடக்கூறுதலும் உடையராயிருப்பர். வேறுபடக்கூறலை அவரவர்கருத்துநோக்கி அமைத்துக்கொள்ளுதல் சாலும். மாறுபடக்கூறலை ஆராய்ச்சியாளர்கள் பன்முறைபயின்று பொருந்தாமை தெரிந்து உண்மைப்பொருளுணர்ந்து வெளியிடல் தமிழ்வளர்ச்சிக்குரியதாகும். அம்முறையில் இவ்வாராய்ச்சியாளர் வடமொழி தென்மொழி இரண்டிலும் பயிற்சியுடையராய்ப் பலதிறப்பட்ட தமிழ்மொழியாராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுவருதலால் அவையெல்லாம் திரண்டு ஒரு புத்தகரூபமாக வெளிவருதல் கூடுமாயின் அது தமிழறிஞர் பலர்க்கும் ஒரு புதுவிருந்தாய் விளங்கும். அதனால் தமிழ் வழக்கில் அமைந்துகிடக்கும் பலப்பல நுண்பொருள்கள் வெளியாகும்.

ஸ்ரீ:

இராமசெயம்*

[இராமாயணத்திருப்புகழ்]

உத்தரகாதை

(உகூச-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அரவி னுடு நீழல் கண்டு
வெருவி யோட மாதி ரங்க
ளலைய மோது மோர்ப்ர சண்ட நெடுவாயு

வதனின் மீறி யேழ்ம டங்கு
சிறகு வீசும் வேக முந்த
வதிர நாக பூஷ ணங்கள் தடுமாறப்

பொருவின் மேரு வான துங்க
வடிவி னோடு லாவு கின்ற
புனித ரூப னும்வி கங்க பதிமேலே

புயல்ச ரோர மேம லர்ந்து
வருவ போல நீயும் வந்து
புதுமை யாக............நின்று தொழுவேனே

வருண னுடு சூறை கொண்ட
நிருதர் கோன னேக மின்சொன்
மடந லாரை வாரி வந்து நகர்மேவ

மகளிர் தாயர் சேர நின்று
கதறி யேயி ராவ ணன்றன்
வரமும் வாழ்வு மோர்ம டந்தை யவளாலே

---

* இது, இச்சங்கப் புத்தகசாலையிலுள்ள ஒரே ஏட்டுப்பிரதிலுள்ளவாறு வெளியிடப்பெறுகிறது. ஏட்டில் இடையிடையே சிதைந்தபகுதி புள்ளியிடப் பெற்றுளது.

யெரியு நீற தாக வென்ற
வலிய சாப மான துண்டு
ரகுப தீயி ராவ ணன்ற னிளையாளோ

ரிருவர் மூவர் காடு சென்று
புகுத மேவி ஞெள னுஞ்சொ
விதுக டேச ஞலுணர்ந்த பெருமாளே. (31)

துலங்கியவ லங்க்ருதப தங்களை
வணங்குதறு டங்குதலி ரங்குதல் விழிநீரே

துளும்புதன்ம யங்குதலெ ழுந்துட
னடஞ்செயறு வண்டிடல்பு ரண்டிடல் தொழுதேறி

வலஞ்செயல்பு யம்புளகி தஞ்செயல்
மகிழ்ந்திடன்ம னங்கரைவு கொண்டிட லதனுண்மெய்

மறந்திடறெ ளிந்திடல்பு ரிந்திடு
தலின்றியென்வ ரம்பெறுதி னம்பழு துறலாமோ

இலங்கைமிசை யங்கவன்ம கன்புரி
நிகும்பலையி தென்கொலென னுங்கணை சிலைமாய

ரதஞ்சிவன்வ ழங்கினன்வி ளங்கென
விகழ்ந்தனனி றந்ததுநி கும்பலை யிறவாதே

நலம்பெறந டந்திடல்வ ருஞ்சுக
மறிந்திலன டந்திளவல் கொண்டது மதுவேகாண்

நயந்தருளெ னும்படிகு றந்தவன்
விளம்பிடந யங்கொடுவி ளங்கிய பெருமாளே. (32)

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுனல் (5) இனியநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திர நூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிநோதி	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	௸ (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப்பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	சந்திரகுப்தன்	0	6	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.